பக்கங்கள்: பன்னிரண்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6.00

சுடர்:15 வள்ளுவர் ஆண்டு 2031 சித்திரை 05 திங்கட்கிழமை (17-04-2000) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:121

# தற்கொலைத் தாக்குதல்களை முறியடிக்க தனி பொலீஸ் பிரிவு!

## 24 மணிநேரமும் செயற்படும்

கொழும்பு,ஏப்ரல்17

**கொழும்பு மற்றும் முக்கிய நகரங்களில் இடம்பெறும் தற்கொலைத் தாக்குதல்களை முறியடிக்கும் வகையில் விசேட பயிற்சி பெற்றவர்களைக் கொண்ட பொலீஸ் பிரிவு ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.**

குற்றத்தடுப்புப் பணியகத்தின் பணிப்பாளரும், சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகருமான பந்துல விக்கிரமசிங்க தலைமையில் இந்த பிரிவு இயங்க ஆரம்பித்துள்ளது.

அண்மைக்காலத்தில் அதிகரித்து வரும் தற்கொலைத் தாக்குதல்களைக் கட்டுப்படுத்தும் வகையில் அந்தப் பணியில் ஈடுபடுத்துவதற்காக ஒரு தொகுதிப் பொலீஸார் தெரிவு செய்யப்பட்டு பயிற்சி அளிக்கப்பட்டு வந்தது.

வெளிநாட்டு நிபுணர்களால் பயிற்சி அளிக்கப்பட்ட நூற்றுக்கு மேற்பட்ட பொலீஸார் இடம்பெறும் இந்தப் பிரிவு 24மணி நேரமும் பணி புரியும்.

நவீன ஆயுதங்களும், குண்டுகளைக் கண்டு பிடிக்கும் உபகரணங்களும் இந்தப் பிரிவினருக்கு வழங்கப்பட்டுள்ளன.

தற்கொலைத் தாக்குதல் இடம்பெறும் என எதிர்பார்க்கப்படும் பகுதிகளில் இவர்கள் பணிபுரிவர்.

குண்டுகளைக் கண்டு பிடிக்கும் பட்சத்தில் உடனடியாக அவற்றைச் செயலிழக்கச் செய்யும் பயிற்சியும் இவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

அதேசமயம் -

தாக்குதல்களைக் கட்டுப்படுத்த வசதியாக அரச திணைக்களங்கள், தனியார் நிறுவனங்கள், பாடசாலைகள் ஆகியவற்றில் பாதுகாப்புக் குழுக்கள் அமைக்க கொழும்பு பிராந்திய பிரதிப் பொலீஸ் மா அதிபர் போதிலியனகே நடவடிக்கை எடுத்துள்ளார்.

ஒவ்வொரு குழுவிலும் ஒவ்வொரு பொலீஸாரும் இடம்பெற்றிருக்கின்றனர். (இ-க-3-7)

## கைப்பற்றிய கண்டி வீதியை பயன்படுத்த முடியாத நிலை!

ஆனையிறவுக்கான விநியோகம் மாற்றுப்பாதை ஒன்றின் மூலமே தொடர்ந்து இடம்பெறுகின்றது என்று பாதுகாப்பு வட்டாரங்களை மேற்கோள்காட்டி கொழும்புச் செய்தி வட்டாரங்கள் தெரிவித்தன.

யாழ்.நகரையும் ஆனையிறவையும் இணைக்கும் கண்டிவீதியூடான பாதையையும் விடுதலைப் புலிகளிடமிருந்து கைப்பற்றி விட்டதாகவும் பாதுகாப்பு தரப்பு அறிவித்திருந்த போதும் -

ஆனையிறவுக்கான விநியோகம் இந்தப் பாதையூடாக இடம்பெறவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்தப் பாதையில் விடுதலைப் புலிகளின் ஷெல் மற்றும் மோட்டார் தாக்குதல்கள் தொடர்வதாகவும் கூறப்படுகிறது. (இ-3)

## ஜனாதிபதியைச் சந்திக்க பீடாதிபதிகள் இணக்கம்!

கொழும்பு,ஏப்.17

அரசின் தீர்வு யோசனைகள் தொடர்பாக ஜனாதிபதியுடன் கலந்துரையாடுவதற்கு பௌத்த பீடங்களின் பீடாதிபதிகள் இணக்கம் தெரிவித்துள்ளனர் என்று கொழும்புச் செய்தி வட்டாரங்கள் தெரிவித்தன.

கலந்துரையாடலுக்கு வருமாறு கடந்த 10ஆம் திகதி ஜனாதிபதி பீடாதிபதிகளுக்கு அழைப்பு விடுத்திருந்தார்.

போதிய அவகாசம் தராத காரணத்தால் கலந்துரையாடலுக்கு சமுகமளிக்க முடியாதுள்ளது என்று பீடாதிபதிகள் அப்பொழுது அறிவித்திருந்தனர்.

தற்சமயம் வெளிநாட்டிலுள்ள ஜனாதிபதி நாடு திரும்பியதும் பீடாதிபதிகள் அவரைச் சந்திப்பர் எனத் தெரிவிக்கப்பட்டது (இ-3)

## கப்பலில் பயணம் செய்யச் சென்ற நூற்றுக்கணக்கான பயணிகள் ஏமாற்றத்துடன் திரும்பினர்

யாழ்ப்பாணம்,ஏப்ரல்17

காங்கேசன்துறையில் இருந்து திருகோணமலைக்கு இன்று புறப்பட்டவிருக்கும் 'லங்காமுடித்த' கப்பலில் பயணம் செய்வதற்காக நேற்று யாழ்.சிவில் நிர்வாக அலுவலகத்துக்கு சென்ற நூற்றுக்கணக்கானவர்கள் ஏமாற்றத்துடன் திரும்பினர்.

இந்தக்கப்பலில் இரண்டாவது சேவையில் பயணம் செய்வதற்காக சுமார் எண்ணூறுபேர் ஏற்கனவே பயணச்சீட்டுக்களைப் பெற்றிருந்தனர்.

இந்தக்கப்பலில் ஆயிரத்து 200 பேரை அனுப்ப முன்னர் ஏற்பாடாகியிருந்த போதும் -

இறுதி நேரத்தில் சுமார் 500 பேரை மட்டுமே அனுப்ப முடிவாகி இருந்தது.

இதன் காரணமாக நூற்றுக்கணக்கானவர்கள் பயணம் செய்ய முடியாத நிலை ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

கொழும்பில் இருந்து திரும்பிப் போகும் பயணச்சீட்டில் வந்தவர்கள், யாழ். சிவில் நிர்வாக அலுவகத்தில் பயணச்சீட்டு பெற்றவர்கள் உட்பட நூற்றுக்கணக்கானவர்களே ஏமாற்றத்துடன் திரும்பினர்.

யாழ். சிவில் நிர்வாக அலுவலகத்தில் இருந்து 480 பேரும் -

வடமராட்சி சிவில் நிர்வாக அலுவலகத்தில் இருந்து நூறு பேரும் - காங்கேசன்துறைக்கு நேற்று அழைத்துச் செல்லப்பட்டிருந்தனர்.

இதேவேளை - திருகோணமலையில் இருந்து வடபகுதிக்கான கப்

(12ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியா - கொழும்பு ரயில்களில் நேற்றிரவு குண்டு வெடிப்புக்கள்

### இரு என்ஜின்கள் பலத்த சேதம்

வவுனியா,ஏப்.17

வவுனியாவிலிருந்து அநுராதபுரம் நோக்கிச் சென்றுகொண்டிருந்த 'ரஜினி' 'இன்ரசிற்றி' ஆகிய ரயில்கள் மீது நேற்றிரவு 10.30மணியளவில் குண்டுத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டன. 4 ரயில்வே ஊழியர்கள் காயமடைந்தனர்.

தண்டவாளங்களில் பொருத்தப்பட்டிருந்த குண்டுகள் வெடித்ததில் இரு ரயில்களின் என்ஜின்களும் நான்கு பெட்டிகளும் சேதம் அடைந்தன.

இந்தக் குண்டு வெடிப்பில் காயமடைந்த ரயில் சாரதிகளான எச்.என்.பி. பண்டாரா(வயது39), சிவநாதன்(வயது49), வி.எம்.ஆர்.ராமநாயகம்(வயது36), வி.எம்.காமினி விக்கிரமநாயக்கா ஆகியோர் வவுனியா ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மீட்புப் பணிகள் உடன் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்றும் -

திருத்தவேலைகள் முடிவடைந்த பின்பே சேவைகள் மீண்டும் ஆரம்பிக்கப்படும் என்றும் - ரயில்வே அதிகாரிகள் தெரிவித்தனர். தண்டவாளங்கள் பலத்த சேதத்துக்குள்ளாகின.

இரண்டுக்கு மேற்பட்ட குண்டுகள் பலத்த -சத்தத்துடன் வெடித்தன என்று தெரிவிக்கப்பட்டது. (இ-3-164)

## தீர்வுக்கு எதிரான கடும் போக்காளர் தெற்கில் புதிய கட்சி அமைக்க முயற்சி

### வியாழனன்று கொழும்பில் கூடி ஆராய்வர்

கொழும்பு,ஏப்.17

சிங்களத் தீவிரவாத அமைப்புக்களை இணைத்து சிங்கள பாரம்பரியம் கட்சி என்ற பெயரில் புதிய அரசியல் கட்சி ஒன்று உருவாக்கப்படவிருக்கிறது.

பிரதான கட்சிகளின் போக்கினால் விரக்தியுற்றிருக்கும் சிங்களக் கடும் போக்காளர்கள் இந்தக் கட்சியை ஆரம்பித்தது குறித்து ஆராய எதிர்வரும் வியாழக்கிழமை கொழும்பில் கூடவிருக்கின்றனர்.

கட்சியின் யாப்பு மற்றும் செயற்பாடுகள் குறித்து இந்தக் கூட்டத்தில் முடிவு செய்யப்படும் என்று புதிய கட்சி அமைப்பாளர்களில் ஒருவரான கலாநிதி பியசேன திசநாயக்க தெரிவித்தார்.

பயங்கரவாதத்துக்கு எதிரான தேசிய இயக்கம், சிங்கள வீரவிதான மற்றும் சிங்கள அமைப்புக்களின் தேசிய கூட்டுப் பேரவை ஆகியவற்றிலிருந்து இந்தக் கட்சிக்கு உறுப்பினர்கள் சேர்க்கப்படவுள்ளனர் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

(12ஆம் பக்கம் பார்க்க)

## சீதுவப் பகுதியில் சிப்பாய் பலி

கொழும்பு,ஏப்.17

சீதுவ இராணுவ முகாமில் கடந்த வெள்ளி இரவு இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் இராணுவச் சிப்பாய் ஒருவர் உயிரிழந்தார்.

சக சிப்பாய் ஒருவரின் துப்பாக்கி தவறுதலாக வெடித்ததாலேயே இந்தச் சிப்பாய் உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்பட்டது. (இ-7)

## அதிபர் நேர்முகப் பரீட்சை இன்று வேம்படியில்

யாழ்ப்பாணம்,ஏப்.17

இலங்கை அதிபர் சேவை தரம் ஒன்றுக்கு பதவி உயர்வு செய்வதற்கான நேர்முகப் பரீட்சைகள் இன்றும் நாளையும் வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளன.

மேற்படி நேர்முகப்பரீட்சையை நடத்துவதற்கென கல்வி, உயர் கல்வி அமைச்சின் மேலதிக செயலாளர் எஸ்.தில்லைநடராஜா நேற்று யாழ்ப்பாணம் வந்துளள்ளார்.

இந்த நேர்முகப் பரீட்சை யாழ். கல்வி வலையத்தில் நடைபெறுமென முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## சுன்னாகத்தில் கிரனேட்வீச்சு

சுன்னாகம்,ஏப்ரல்17

சுன்னாகம் பகுதியில் வீதிப் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருந்த படையினர் மீது நேற்று நண்பகல் கிரனேட் தாக்குதல் நடத்தப்பட்டது.

இலங்கை வங்கிக்கு முன்பாக கே.கே.எஸ் வீதியில் இச்சம்பவம் இடம்பெற்றது.

கிரனேட் வீச்சைத் தொடர்ந்து படையினரால் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளபட்டது.

இந்தச் சம்பவத்தில் படையினர் தரப்பில் சேதம் எதுவும் ஏற்பட்டதாகத் தகவல் இல்லை. இந்த சம்பவத்தின் பின்னர் சுன்னாகம் தெற்குப் பகுதியில் படையினர் வீடு வீடாகச் சென்று தேடுதல் நடத்தினர். (இ-27)

## நீர்கொழும்பில் தமிழ் இளைஞர் நால்வர் கைது

கொழும்பு,ஏப்ரல் 17

நீர்கொழும்பு நகரப் பகுதியில் நேற்றுக்காலை நடத்தப்பட்ட தேடுதலின் போது 4 தமிழ் இளைஞர்கள் பொலீஸாரால் கைது செய்யப்பட்டனர்.

கொழும்பிலும் அதன் அயற் பிரதேசங்களிலும் அண்மைக்காலமாக பஸ்களில் இடம்பெற்று வந்த குண்டு வெடிப்புச் சம்பவங்கள் தொடர்பாகவே மேற்படி இளைஞர்கள் கைது செய்யப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

இவ்வாறு கைது செய்யப்படவர்கள் அனைவரும் வடக்கு - கிழக்குப் பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என்று பொலீஸார் தெரிவித்தனர். (இ-7)

## வடமராட்சி கிழக்கில் தாக்குதல்

யாழ்ப்பாணம்.ஏப்.17

வடமராட்சி கிழக்குப் பகுதியில் நேற்று அதிகாலை கடுமையான ஷெல் பீரங்கித் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

நேற்று முன்தினம் இரவு 9 மணியிலிருந்து இத்தாக்குதல்கள் இடம்பெற்ற போதிலும் நேற்று அதிகாலை தாக்குதல் உக்கிரமடைந்தன.

பருத்தித்துறைப் பகுதிகளிலும் இத்தாக்குதல்களின் அதிர்வுகள் வீடுகளைக் கிடுகிடுக்கவைத்தன. (இ-173-15)

## இந்தியாவில் கதிர்காமருக்கு சத்திரசிகிச்சை

கொழும்பு,ஏப்.17

தற்சமயம் இந்தியாவில் சிகிச்சை பெற்றுவரும் வெளிவிவகார அமைச்சர் லஷ்மன் கதிர்காமர் சத்திரசிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார் என்று கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

கடந்த ஒருமாத காலமாக புதுடில்லியிலுள்ள வைத்தியசாலை ஒன்றில் சிகிச்சை பெற்றுவரும் அமைச்சரின் உடல்நிலை மோசமான நிலையில் உள்ளதாக மேலும் தெரிவிக்கப்பட்டது. (இ-3)

# கப்பல் சேவை ஆரம்பிக்க உதவுமாறு செஞ். குழுவைக் கோருகிறார் ஆயர்

யாழ்ப்பாணம்,ஏப்.17

குடாநாட்டுக்கும் வெளியிடங்களுக்கும் இடையிலான போக்குவரத்து முற்றாக ஸ்தம்பித்துள்ளதால் நிர்க்கதி நிலையில் உள்ள மக்களுக்கு உதவும் வகையில் பயணிகள் கப்பல் சேவையை உடன் ஆரம்பித்து உதவவேண்டும் என்று யாழ். ஆயர் அதிவண. தோமஸ் சௌந்தரநாயகம் செஞ்சிலுவைச் சர்வதேசக்குழுவிடம் அவசர கோரிக்கை ஒன்றை விடுத்துள்ளார்.

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் இலங்கை வதிவிடப்பிரதிநிதிக்கு அனுப்பியுள்ள 'பக்ஸ்' செய்தியிலேயே இந்தக் கோரிக்கையை ஆயர் விடுத்தார்.

அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

குடாநாட்டுக்கும் வெளியிடங்களுக்குமான விமான மற்றும் கப்பல் சேவைகள் யாவும ஸ்தம்பித்துள்ளன.

இதன் காரணமாக குடாநாட்டில் இருந்து வெளிமாவட்டங்களுக்கு அவசரப்பணிகளுக்குக் கூட எவரும் செல்ல முடியாத நிலை உள்ளது.

ஜனாதிபதியின் பணிப்பின் பேரில் ஜப்பானில் இருந்து கப்பல் ஒன்றை தனியார் வர்த்தகர் ஒருவர் கொண்டுவந்துள்ளார்.

அவரது கப்பலைச் சேவையில் ஈடுபடுத்த பாதுகாப்பு அமைச்சு அனுமதி வழங்கியுள்ளது.

இந்தக் கப்பலுக்கு தங்கள் அமைப்பின் வழித்துணை கிடைக்குமானால் அதனைப் பயணிகள் சேவையில் ஈடுபடுத்த முடியும் என்று அந்தக் கப்பல் நிறுவனப் பிரதிநிதி தெரிவித்துள்ளார்.

(12ஆம் பக்கம் பார்க்க)


**ராஜா**

யாழ்ப்பாணம்

*அஜித், ஷாலினி*

நடிப்பில்

**அமர்க்களம்**

காட்சிகள்
10.30, 2.30

(C/11604)


**யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி**
**பழைய மாணவர் சங்கம்**

**முழுநிலா நாள் கருத்தரங்கு**

இடம் : யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி,
குமாரசுவாமி மண்டபம்.

காலம் : நாளை (18-04-2000) செவ்வாய்க்கிழமை
பிற்பகல் 3.00 மணி (புதிய நேரம்)

தலைமை : திரு. க.சி.குகதாசன்
(முன்னாள் அதிபர், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி)

கருத்துரை : "காணாமற்போனோரின் குடும்பங்களில் ஏற்படும் சமூக, உளவியல் தாக்கங்கள்"

வழங்குபவர் : வைத்தியகலாநிதி சா. சிவயோகன்

**அனைவரும் வருக!**

*பழைய மாணவர் சங்கம்,*
*யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி*

ஆதரவு:

**Institute Of Informatic Studies**
100, Clock Tower Road, Jaffna.
Telephone: 2831

(C/11871)


**நாகம்ஸ்**

சுன்னாகம்

ரஜனி, சௌந்தர்யா,
ரம்பா, செந்தில்

நடிப்பில்

**அருணாச்சலம்**

காட்சிகள்
11.00, 2.30
(புதிய நேரம்)

(C/11760)

**லிபேட்டி**

அச்சுவேலி

இன்றும் நாளையும்

விஜயகாந்த்,
அருண்பாண்டியன்,
ரஞ்சிதா

நடிப்பில்

**தாயகம்**

காட்சிகள் :10.30, 2.30

T.P-070-212223
- 070 - 212678
FAX No. 0094 - 70212223

(75258)



KOBE KOBE KOBE KOBE KOBE KOBE

**நீங்கள் வாங்கும் பொருள் தரமானதா?**

**உங்கள் பணத்திற்கு நாங்கள் உத்தரவாதம் தருகின்றோம்.**

**உங்களுக்குத் திருப்தி இல்லையெனில் முழுப்பணத்தையும் மீளப்பெறும் வசதியோடு வருகின்றன!**

**KOBE**

**அன்டனாக்களும் பூஸ்டர்களும்**

**இலங்கையில் விற்பனையில் முதலிடம் வகிக்கும் தரமான பொருள்கள்**

உங்களுக்கு அபிமான தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை தங்கு தடையின்றி தெட்டத் தெளிவாகப் பார்த்து மகிழ வேண்டுமா?

*கவலை வேண்டாம்!*

*இப்போது!*

32 வெவ்வேறு வடிவங்களில் அன்டனாக்களும், 21 வடிவங்களில் பூஸ்டர்களும்

**இலங்கையில் எப்பாகத்திலும் பாவனைக்குகந்த தரத்துடன் கிடைக்கின்றது.**

**LANKA NIPPON**

No. 18, Keyzer Street, Colombo - 11
Tel: 437735 Fax: 437736
No. 10, Trelawny Place,
(Behind Milk Bar)
Bambalapitiya Junc. Colombo - 4
Tel:589992

**'KOBE தரத்தின் சின்னம்'**

KOBE KOBE KOBE KOBE KOBE KOBE



**லைடனின்**
**குதூகல மலிவு விற்பனை!**

*வருகை தரும் ஈஸ்டரை முன்னிட்டு*
*22-04-2000 வரை*

**மாபெரும் மலிவு விற்பனை**

சகலவிதமான ஆடைத் தெரிவுகளுக்கும்
விசேட கழிவு உண்டு

**அன்றும் இன்றும் என்றும்**

உங்களை அழகுபடுத்த உங்களுக்குக் கைகொடுக்கும்
ஒரே ஸ்தாபனம்

**லைடன் புடைவை நிலையம்**

இல.410, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

(C/11857)


சாவகச்சேரி கிராம்புவில்
படையாண்டான் தோட்டம் கந்தசாமி கோயில்
இந்து இளைஞர் மன்ற வளர்ச்சி நிதிக்கான

**அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு முடிவுகள்**

- முதலாம் பரிசு **0315** (வென்றெடுக்கப்பட்டுள்ளது)
- இரண்டாம் பரிசு **1361** (வென்றெடுக்கப்பட்டுள்ளது)
- மூன்றாம் பரிசு **0304** (வென்றெடுக்கப்பட்டுள்ளது)

ஆறுதல் பரிசுகள் பத்து:-
**0911, 0310, 0058, 1212, 1141,**
**1123, 0750, 0057, 0122, 0053.**

பரிசில்களை மேற்கூறிய மன்றத்தினரிடம்
கெ:குவிரைவில் பெற்றுக்கொள்ளவும்.

(75465) — நிர்வாகத்தினர்

## கண்ணீர் அஞ்சலி

எமது சிரேஷ்ட ஆசிரியை
திருமதி சறோஜினிதேவி சிவபாலன் அவர்களின்
அருமைத் தந்தையார்

**சி. திருநாவுக்கரசு**

அவர்களின் அமரத்துவத்தையொட்டி துயருற்ற அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவர்தம் ஆத்ம சாந்தி வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.

*அதிபர், ஆசிரியர்கள்,*
*மாணவர்கள்*
*யா/கோண்டாவில் இந்து மகாவித்தியாலயம்*

(75480)

## கண்ணீர் அஞ்சலி

சிற்பக்கலைஞர்களான
விஸ்வப்பிரம்மஸ்ரீ சு.பாஸ்கரன், சு.சரவணன்
ஆகியோரின் அன்புத் தாயார்

**சுப்பிரமணியம் பசுபதி**

அவர்களின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

*ஸ்தபதி செ.பாலச்சந்திரன்*
*ஸ்ரீ காளிகா சிற்பாலய கலைஞர்கள்*

*புத்தூர்,*
*திருநெல்வேலி.*

(75490)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி விஜயலட்சுமி ஒப்பிலாமணி

(ஆசிரியை)

சாத்தனை கரவெட்டி கிழக்கைச் சேர்ந்த திருமதி விஜயலட்சுமி ஒப்பிலாமணி அவர்கள் காலமானார்.

அன்னார் சின்னத்தம்பி ஒப்பிலாமணி (குடியேற்ற அதிகாரி, பிரதேச செயலர் அலுவலகம், மருதங்கேணி) அவர்களின் அன்பு மனைவியும் திவாகரன், சசிகரன், சுஜிதா ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற சின்னத்தம்பி - தெய்வானைப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகளும் இராசலட்சுமி, இரகுநாதன், பாக்கியலட்சுமி, சத்தியநாதன், பரமானந்தம் ஆகியோரின் சகோதரியும் சுகேந்திரன், அம்புலிதேவி, சரோஜினி, சிவகௌரி, சிம்மாசனி ஆகியோரின் மைத்துனியும் அகிலன், அரவிந்தன், பிரமீளா, பிரவீணா, நிவேதன், நிவேதிகா, சீபா ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (17-04-2000) திங்கட்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் மேற்படி இல்லத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சி.ஒப்பிலாமணி
(கணவர்)

(C/11870)

## அந்தோனிப்பிள்ளை றோமியோ கிளமக்ஸ் (ஜெறோம்)

இராஜேந்திரா வீதி, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸை வசிப்பிடமாகவும் கொண்ட அந்தோனிப்பிள்ளை றோமியோ கிளமக்ஸ் (ஜெறோம்) 10-04-2000 திங்கட்கிழமை பிரான்ஸில் காலமாகிவிட்டார்.

அன்னார் அந்தோனிப்பிள்ளை - றெஜினா இராஜேஸ்வரியின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான அந்தோனிப்பிள்ளை, பூமணி எலிசபேத் ஆகியோரின் அன்பு மருமகனும் செலஸ்ரினா செல்வராணியின் (முன்னாள் ஆசிரியை, O.L.R) அன்புக் கணவரும் ஜெகன், ஜெப்ரி ஆகியோரின் அன்புத் தந்தையும் அலக்ஸ், அன்ரன், வதனா, சியாமளா, டொறின் நன்சி ஆகியோரின் சகோதரனும் கிளமன்ற் செல்வராஜா, சிசிலியா செல்வமலர் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் இன்று (17-04-2000) திங்கட்கிழமை பிரான்ஸில் நடைபெறும்.

தகவல்:
இந்திரசேகரா
(மாமா)

*இல.2, ஆசிர்வாதம் லேன்,*
*யாழ்ப்பாணம்.*

(75486)

# மருத்துவபீட மாணவர் அனுமதி குறைக்கப்படுவதற்கு ஆட்சேபம்

## ஜனாதிபதிக்கு பிரதேச சபை மகஜர்

வலி. கிழக்கு, ஏப்ரல் 17

யாழ். மருத்துவபீடத்திற்கு அனுமதிக்கப்படும் மாணவர் எண்ணிக்கை குறைக்கப்படுவது குறித்து வலி. கிழக்குப் பிரதேச சபை ஆட்சேபம் தெரிவித்துள்ளது.

இது விடயம் தொடர்பாகக் கடந்த மாதம் 15 ஆம் திகதி நடைபெற்ற சபையின் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கு அமைய ஜனாதிபதிக்கு மகஜர்ஒன்றை அனுப்பவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

ஏனைய பல்கலைக்கழகங்களுடன் ஒப்பிடும்போது யாழ். மருத்துவபீடத்திற்கு அனுமதிக்கப்பட்டுவரும் மாணவர் எண்ணிக்கை குறைந்து வருவதைப் புள்ளிவிவரம் மூலம் விளக்கி ஜனாதிபதிக்கு மகஜர் அனுப்பப்படவுள்ளது.

பிரதேச சபைத் தலைவர் பூ. குணசிங்கம் கையெழுத்திட்டு யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வி. குகேந்திரன் (ஜெகன்) ஊடாக அனுப்பப்படவுள்ள அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

வருடாவருடம் யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்திற்கு மிகவும் குறைந்த எண்ணிக்கையினரே தெரிவு செய்யப்படுகின்றனர். புள்ளி விவரங்களுடன் ஒப்பிடுகையில் தென்பகுதிப் பல்கலைக்கழகங்களிலும் பார்க்க மாணவர் தெரிவு குறைக்கப்பட்டுள்ளது. தற்போது 93 ஆகக் குறைக்கப்பட்டதாகவும் அறிய முடிகின்றது.

இந்த 25 மாணவர் குறைப்பு விவகாரம் தமிழ் மாணவர்களுக்கு எதிராக இழைக்கப்படும் அநீதி, பாரபட்சம் என்றே நாம் கருத வேண்டியுள்ளது. மாணவர்கள் மின்சார வசதிகள் இல்லாத நிலையிலும் குப்பி விளக்கிலும், போதிய உணவு ஊட்டச்சத்து அற்ற நிலையிலும் மன அமைதியற்ற போர்ச் சூழலிலும் தம்மைத் தியாகம் செய்து படித்து உயர் புள்ளிகளைப் பெற்றும் கூடப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் இந்தப் பாரபட்சமான நடவடிக்கையினால் வெதும்பி விரக்தியடைந்த நிலையில் இருக்கின்றார்கள். எனவே எதிர்காலத்தில் யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட மாணவர் எண்ணிக்கையை அதிகரிக்க உரிய நடவடிக்கை எடுக்குமாறு தங்களைக் கேட்டுக் கொள்கின்றேன்-- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-180)

## வீதிகள், கட்டடங்கள் திருத்த 7 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு

வலி. கிழக்கு, ஏப்ரல் 17

வலி. கிழக்குப் பிரதேச சபைக்கு உட்பட்ட வீதிகள் பொதுக்கட்டடங்களின் புனரமைப்பு வேலைகளுக்கென இவ்வாண்டு பிரமாண அடிப்படையிலான மூலதனநிதி மூலம் 7 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

உரும்பிராய் சிவன் வீதி திருத்தம், உரும்பிராய் கணேசா ச. ச. நிலையம் திருத்தம், அச்சுவேலி கஜமுகன் பாலர் பாடசாலை விளையாட்டுப் பொருள்கள் அன்பளிப்பு, அச்சுவேலி ஆவரங்கால் முதலாம் ஒழுங்கை திருத்தம், நீர்வேலி கந்தசாமி கோயில் மேற்குவீதி திருத்தம், அச்சுவேலி காளி கோயில் வீதி திருத்தம், கோப்பாய் வடக்கு கலம்பரை வீதி சிமெந்து அணைகட்டல், உரும்பிராய் இந்து இளைஞர் சனசமூக நிலைய மலசல கூடம் திருத்தம், யோகபுரம் குழாய்க் கிணறு திருத்தம், இருபாலை விக்கினேஸ்வரா ச. ச. நிலையம் திருத்தம், புத்தூர் கிழக்கு குமாரசாமி வீதி மத்திய ச. ச நிலைய ஒழுங்கை திருத்தம், சிறுப்பிட்டி சனசமூக நிலைய மலசல கூடங்கள் திருத்தம், உரும்பிராய் இந்து ஒழுங்கை திருத்தம், புத்தூர் புன்னை வீதி மதவு அமைத்தல்ஆகிய வேலைகள் விரைவில் நடைபெறவுள்ளன.

(ஐ 180)

## ஆயுள்வேத நிலையங்களுக்கு மருத்துவ உபகரணங்கள்

நல்லூர், ஏப்ரல் 17

யாழ். குடாநாட்டில் உள்ள சித்த ஆயுள்வேத வைத்திய நிலையங்களுக்கான மருத்துவப் பரிசோதனைக் கருவிகள் வடக்கு — கிழக்கு மாகாண சுதேச மருத்துவத் திணைக்களப் பணிப்பாளர் பேராசிரியர் எஸ். பவானியால் கடந்த ஞாயிற்றுக்கிழமை வழங்கப்பட்டன.

சித்த ஆயுள்வேத மருத்துவர்கள் சங்கத்தின் தலைவர் எஸ். கனகசிங்கம் தலைமையில் நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்ட யாழ்ப்பாணம் மாநகரசபை ஆணையாளர் வே. பொ. பாலசிங்கத்திடம் யாழ். மாநகரசபை ஆயுள்வேத மருந்தகத்திற்கான மருத்துவ பரிசோதனைக் கருவிகள் முதலில் கையளிக்கப்பட்டன.

அதைத் தொடர்ந்து வலிகாமம் கிழக்கு வேலணை பிரதேச சபைச் செயலாளர்களும் ஏனைய வைத்திய நிலையங்களின் வைத்திய அதிகாரிகளும் மருத்துவப் பரிசோதனைக் கருவிகளை பேராசிரியர் பவானியிடம் இருந்து பெற்றுக்கொண்டனர்.

(ஐ-111)

## இடைக்காடுப் பகுதியில் நடமாடும் வைத்திய சேவை

வலி. கிழக்கு, ஏப்ரல் 17

இடைக்காடு மக்களின் நலன்கருதி அச்சுவேலி ஆஸ்பத்திரி வைத்திய அதிகாரிகள் குழு ஒன்று மாதத்தில் ஒரு நாள் நடமாடும் வைத்திய சேவையை நடத்தி வருகின்றது.

போக்குவரத்து வசதி குறைந்த இடைக்காடு, வளலாய், தம்பாலை, கதிரிப்பாய், வரணை போன்ற பகுதி மக்களின் நலன் கருதியே இச் சேவை மாதத்தில் இரண்டாவது செவ்வாய்க்கிழமைகளில் இடைக்காடு தாய், சேய் நலச் சிகிச்சைப் பிரிவில் நடைபெற்று வருவதாக வைத்திய அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ஐ-180)

## ஊர்காவற்றுறை

## துறைமுகப் பாலத்தில் இறங்க பயணிகள் பெரும் சிரமம்

நெடுந்தீவு, ஏப்ரல் 17

ஊர்காவற்றுறை துறைமுகப் பாலத்தின் கிழக்குப் பகுதியில் படகுகளை நிறுத்துவதால் பயணிகள் படகில் இருந்து இறங்குவதில் பலத்த கஷ்டங்கள் உள்ளதாக அனலைதீவு, எழுவைதீவுப் பயணிகள் தெரிவித்துள்ளனர்.

துறைமுகப்பாலத்தின் கிழக்கு ஓரத்தில் பொருள்களை இறக்க உதவும் கொள்கலன் (பாஜ்) ஒன்று நீண்ட நாள்களாக கடல் நீரில் மூழ்கிய நிலையில் கிடக்கின்றது. இப்போது குமுதினிப்படகும் அதன் அருகே நங்கூரமிட்டு நிற்பதால் ஏனைய தீவுகளில் இருந்துவரும் படகுகளை இவற்றின் அருகில் நிறுத்துவதால் பயணிகள் தமது பொருள்களுடன் முதலில் குமுதினியிலும் அடுத்து மூழ்கிக்கிடக்கும் பாஜ்ஜிலும் இறங்கியே பின் துறைமுகப் பாலத்தில் இறங்கவேண்டியுள்ளது.

படகிற்கு ஏறும்போதும் இவை இரண்டையும் கடந்தே படகில் ஏற வேண்டியுள்ளது.

துறைமுகப்பாலத்தின் மேற்குப் பகுதியில் படகுகள் சுலபமாக அணைக்கக் கூடியதாக இருந்தபோது படகு ஊழியர்கள் அப்பகுதியில் படகை நிறுத்தாது பாலத்தின் கிழக்குப் பகுதியிலேயே நிறுத்துகிறார்கள் என்றும் — இதனால் நோயாளர்கள் மற்றும் குழந்தைகளுடன் வரும் தாய்மார்கள் பாரமான பொருள்களுடன் வரும் இதர பயணிகள் அனைவரும் சிரமத்துக்குள்ளாவதாகவும்— தெரிவிக்கப்படுகிறது.

(ஐ-111)

## இரு சடலங்கள் அடக்கம்

கொழும்பு, ஏப்ரல் 17

மன்னார் நகரப்பகுதியில் கடந்த செவ்வாய்க்கிழமை கண்கள் கட்டப்பட்ட நிலையில் மர்மமான முறையில் கொலை செய்யப்பட்டுச் சடலங்களாக மீட்கப்பட்ட மூன்று இளைஞர்களில் இருவரின் சடலங்கள் கடந்த வெள்ளிக்கிழமை அவர்களின் உறவினர்களினால் அடையாளம் காணப்பட்டுள்ளன.

இராஜலிங்கம் ஜெயச்சந்திரன் (வயது 18), காந்தலிங்கம் சுதாகர் (வயது 19) ஆகியோரின் சடலங்களே அடையாளங்காணப்பட்டு வெள்ளிக்கிழமை மாலை அரச செலவில் அடக்கம் செய்யப்பட்டன. (ஐ-9)

## சிறுவருக்குப் பால் விநியோகம்

நவாலி, ஏப்ரல் 17

மானிப்பாய் பரிஸ் விபோ கழகத்தின் ஆதரவில் சாவல்கட்டுக் கிராமத்தில் உள்ள 5 வயதிற் குட்பட்ட பிள்ளைகளுக்கு வாரத்தில் இரு தடவைகள் பால் வழங்கப்பட்டு வருகின்றது.

சுமார் 95 பிள்ளைகளுக்கு குமுதினி, மகாத்மா ஆகிய சனசமூக நிலையங்களில் வைத்து வழங்கப்படும் இப் பால் விநியோகம் தொடர்ந்து 6 மாதங்களுக்கு மேற்கொள்ளப்படுமென்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-100)

# செய்திக் கொத்து

## தரமற்ற அரிசி விநியோகம்

வலி. வடக்கு. ஏப்ரல் 17

கோண்டாவில் பகுதியில் இடம் பெயர்ந்தவர்களுக்கு வழங்கப்பட்ட நிவாரணத்திற்கான அரிசி பாவனைக்கு உதவாததாகக் காணப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கோண்டாவில் கிழக்குப் பகுதியில் உள்ள கிராம அலுவலர்உரியசங்கக்கிளைகளுக்குச் சென்று நிவாரணப் பொருள்களைப் பார்வையிட்டு அவற்றை வழங்கவேண்டாமெனப் பணித்துள்ளார். (ஐ-86)

## நினைவுத் தூபி

வலி. தென்மேற்கு. ஏப்ரல் 17

நவாலி — சென். பீற்றேர்ஸ் ஆலயத்தில் கடந்த 95 ஆம் ஆண்டு விமானத் தாக்குதலில் கொல்லப்பட்டவர்களின் நினைவாக நினைவுத் தூபி ஒன்று நவாலி—வட்டுக்கோட்டை பிரதான வீதியில் அமைக்கப்படவுள்ளது. இதற்கான நடவடிக்கையினை மானிப்பாய் பிரதேச சபைத் தலைவர் வெலிச்சோர் அன்ரன் ஜோன்சன் மேற்கொண்டுள்ளார்.

95 ஆம் ஆண்டு நவாலி சென். பீற்றேர்ஸ் ஆலயத்தின் மீது மேற்கொள்ளப்பட்ட விமானத்தாக்குதலில் 5 அரச அலுவலர்கள் உட்பட 247 பேர் கொல்லப்பட்டதும்—

320 பேர் காயமடைந்ததும்—

தெரிந்ததே.

(க-185)

## வீதித்திருத்த வேலைகள் ஆரம்பம்

வலி. தென்மேற்கு, ஏப்ரல் 17

நவாலி வடக்கு சோமசுந்தரப் புலவர் வீதியின் திருத்த வேலைகள் ஒரு வருடத்துக்குப் பின்னர் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

மேற்படி வீதியினைத் திருத்துமாறு பல தடவை மக்களால் கோரிக்கை விடப்பட்டதும் — இது விடயத்தில் மானிப்பாய் பிரதேச சபைத் தலைவர் வெ. அ. ஜோன்சன் நடவடிக்கை எடுத்ததும் தெரிந்ததே. (க-185)

## சிரமதானம்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 17

ஊர்காவற்றுறை வைத்தியசாலையின் பின் வீதி சிரமதானப் பணி மூலம் துப்புரவு செய்யப்பட்டது.

சுகாதார வாரத்தை முன்னிட்டு கடந்த 8 ஆம் திகதி ஈ. பி. டி. பி. யின் யாழ். மாவட்ட உதவி அமைப்பாளரும், ஊர்காவற்றுறை பிரதேச சபைத் தலைவருமான ந. மதனராஜா தலைமையில் சனசமூக நிலைய உறுப்பினர்களும் பிரதேச சபை ஊழியர்களும் இணைந்து சிரமதானப் பணியில் ஈடுபட்டு மேற்படி வீதியைத் துப்புரவு செய்தனர்.

அன்றைய தினம் பிரதேச சபையினால் நூல் கொள்வனவுக்கென ஒதுக்கப்பட்ட நிதியில் இருந்து ஐயாயிரம் ரூபா பெறுமதியான நூல்கள் புளியங்கூடல் ச. ச. நிலையம், ஞானவைரவர் ச. ச. நிலையம், சென். திரேசா ச. ச. நிலையம், கெண்டி ச. ச. நிலையம் என்பவற்றுக்கு வழங்கப்பட்டன.

(க)

## கௌரவிப்பு

நெல்லியடி, ஏப்ரல் 17

மல்லாகம் மாவட்ட நீதிவானாகப் பதவி உயர்வு பெற்றுச் சென்ற சு. பா. சுப்பிரமணியம் விருந்துபசாரம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டுள்ளார்.

வடமராட்சி சட்டத்தரணிகள் சங்கமும், நீதிவான் நீதிமன்ற நலன்புரிச் சங்கமும் இணைந்து நடத்திய இவ்வைபவம் அண்மையில் பருத்தித்துறை மாவட்ட நீதி மன்றத்தில் பதில் நீதிவான் பொ. குமாரசாமி தலைமையில் நடைபெற்றது. (க-109)

## பொன்விழாவும் திறப்பு விழாவும்

குருநகர், ஏப்ரல் 17

யாழ். நாவாந்துறை சென். நீக்கலஸ் சனசமூக நிலையத்தின் பொன்விழாவும் கட்டடத் திறப்புவிழா மற்றும் மலர் வெளியீடும் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றன.

பிரதம விருந்தினராக நாவாந்துறை முன்னாள் பங்குத் தந்தை அருட்திரு. பீ. எம். இம்மானுவேல் கலந்து கொண்டார்.

(க-51)

## மருந்துப் பொருள்கள் வந்தன

யாழ்ப்பாணம், ஏப்ரல் 17

செஞ்சிலுவைசர்வதேசக் குழுக்கப்பலில் யாழ். ஆஸ்பத்திரிக்கு அத்தியாவசிய மருந்துப்பொருள்கள் சில எடுத்துவரப்பட்டுள்ளன.

(க-139)

## பாலர் பாடசாலை

காரைநகர், ஏப்ரல் 17

அகதிகளுக்கான ஐ. நா தூதரகத்தினால் ஊர்காவற்றுறை கரம்பன் கிழக்கில் அமைக்கப்பட்ட பாலர் பாடசாலை கடந்த மாதம் ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் ஜே. எக்ஸ். செல்வநாயகத்தால் திறந்து வைக்கப்பட்டது.

இந்தப் பாலர் பாடசாலை 50 ஆயிரம் ரூபா செலவில் புதிதாக அமைக்கப்பட்டுள்ளது. (க-73)

## வைத்திய உபகரணங்கள் வழங்கப்பட்டன

வலி. தென்மேற்கு, ஏப்ரல் 17

மானிப்பாய் கிறீன்ஞாபகார்த்த வைத்தியசாலைக்கு இலங்கைக்கான பிரிட்டிஷ் தூதுவர் செல்வி லிண்டா ஜோய் டபீல்ட் பல லட்சம் ரூபா பெறுமதியான வைத்திய உபகரணங்களை வழங்கியுள்ளார்.

அண்மையில் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்த பிரிட்டிஷ் தூதுவர், ரொசியா அல்ரா சவுண்ட் ஸ்கானர், ஈசிஜீ இயந்திரம் ஒலிம்பஸ் நுணுக்குக்காட்டி என்பவற்றை வைத்திய அதிகாரியிடம் வழங்கினார். (க - 185)

## விஞ்ஞான விழா

கொக்குவில் இந்துக் கல்லூரியில் விஞ்ஞானதின விழாவும் 'சாரதி' சஞ்சிகை வெளியீடும் கடந்த மாதம் 16 ஆம் திகதி கல்லூரியின் பிரதான மண்டபத்தில் நடைபெற்றன.

பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக கணித புள்ளி விவரவியல் துறைத் தலைவர் பி. மகினன் கலந்து கொண்டார்.

## கண்ணீர் அஞ்சலி

திருமதி இராசலிங்கம் றஞ்சிதராஜேஸ்வரி

எமது சங்கத்தின் பணியாளர்

திரு. சி. இராசலிங்கம்

அவர்களின் அன்பு மனைவி றஞ்சிதராஜேஸ்வரி அவர்கள் கடந்த 01-04-2000 அன்று அகாலமரணமடைந்ததையிட்டு துயரடைந்திருக்கும் அவர் தம் துணைவருக்கும், குடும்பத்தாருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

பணியாளர்கள்,
பளை தென்னை வள அபி. கூட்டுறவுச்சங்கம்
பளை.

(சி/11858)

## 56ஆவது பிறந்ததின நினைவு நாள்



மலர்வு: 17 — 04 — 1944

உதிர்வு: 08 — 11 — 1999

### திருமதி தயானந்தன் தையல்நாயகி

பார்புகழும் பிள்ளை பண்பினிலே சிகரமாய்
பாசத்தின் இருப்பிடமாய் அன்பின் திருவுருவாய்
அமைதியின் உறைவிடமாய் குணத்தின் இலக்கணமாய்
குடும்பத்தின் குலவிளக்காய்
தரணியிலே தரமுயர்ந்து தரமாக நாம்வாழ
வழிவகுத்த அம்மாவே! மீண்டும் வந்து
எப்போது எங்கள் துயர் துடைப்பது
உங்கள் நினைவும் பாசமும் எம்மைவிட்டு
என்றும் அகலாது.

தகவல்:
கணவர், பிள்ளைகள்.

43, அச்சுக்கூட ஒழுங்கை,
கொக்குவில்.

(75461)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



### பொன்னார் லோகராஜா

மலர்வு: 1956- 08- 27

உதிர்வு: 1999- 04- 28

திதி: 17. 04. 2000

ஆண்டு ஒன்று சென்றதையா
மாறவில்லை எம் துயரம்
மண்ணுலகில் அழுது புரண்டாலும்
மாறிடுமோ எம் துயரம்
அம்மாவிடம் சென்றீரோ
அம்மாவின் அணைப்பில் இருப்பீரோ
மாண்டா நீவிர் வருவீரோ
மாறாத எம்துயர் தீர்க்க!

உங்கள் ஆத்மா சாந்தியடைய தினமும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மாறாத துயருடன்

தந்தை, மனைவி, மகள், சகோதரன், சகோதரிகள், மைத்துனி, பெறாமகள், மருமக்கள்.

கனகசபை வீதி,
மானிப்பாய்.

(75329)

# வெளித்தொடர்பு இன்றி பளையில் இன்னும் 389 குடும்பங்கள்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 17

பளை பிரதேச செயலர் பிரிவில் உயர் பாதுகாப்பு வலயமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ள மாசார், சோரன்பற்று, தர்மக்கேணி ஆகிய பகுதிகளில் 389 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 945 பேர் இன்னமும் தங்கியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பளைப் பிரதேசத்தில் யுத்தம் ஏற்பட்டதையடுத்து வெளித்தொடர்புகள் எதுவும் இன்றி இருந்த இந்த மூன்று கிராம மக்களுக்கும் அண்மையில் பளை ப. நோ. கூ. சங்கத்தினால் உணவு மற்றும் எரிபொருள்கள் வழங்கப்பட்டன.

இந்தப்பகுதிகளில் இருந்து பலர் வெளியேறுவதற்குத் தயாராக இருந்த போதும் படையினர் இவர்களை வெளியேற அனுமதிக்கவில்லை என்று கூறப்படுகிறது.

மாசார், சோரன்பற்று, தர்மக்கேணி ஆகிய இந்தக் கிராமங்கள் ஆனையிறவுப் படைப் பிரிவின் கட்டுப்பாட்டிற்குள் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஐ—5)

## ஓய்வூதியம் பெறவில்லை

தென்மராட்சி, ஏப்ரல் 17

பளை கிராமிய வங்கியில் ஓய்வூதியம் பெறும் ஓய்வூதியர்களின் ஏப்ரல் மாதத்துக்கு உரிய கொடுப்பனவுகளை இன்னமும் அவர்கள் பெற்றுக்கொள்ளவில்லையென்று தெரிவிக்கப்படுகிறது.

ஓய்வூதியர்கள் இடம் பெயர்ந்துள்ள போதிலும் பளை கிராமிய வங்கி தற்போதும் பளையிலேயே இயங்குவதால் ஏப்ரல் மாத ஓய்வூதியக் கொடுப்பனவை ஓய்வூதியர்கள் பெற்றுக்கொள்ள முடியவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டது. [8-6-117]

## யாழ். செயலக அதிகாரிகள் குழு விஜயம்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 17

பளை மற்றும் மருதங்கேணிப் பகுதிகளில் அண்மையில் இடம்பெற்ற தாக்குதல்களைத் தொடர்ந்து இடம்பெயர்ந்த அப்பகுதி மக்கள் தங்கியுள்ள நலன்புரி நிலையங்களுக்கு யாழ். செயலக அதிகாரிகள் குழு ஒன்று விஜயம் செய்யவுள்ளது.

இந்த அதிகாரிகள் குழு முதலில் தென்மராட்சிப் பகுதியிலுள்ள நலன்புரி நிலையங்களுக்கு விஜயம் செய்து அங்கு உள்ள மக்களின் குறைபாடுகளைத் தெரிந்துகொள்ளும். [இ—6—5]

## உற்பத்திப் பொருள்களை விற்க அனுமதி

பளை சோரன்பற்று விவசாயிகள் தமது உற்பத்திப் பொருள்களை வெளி இடங்களுக்குக் கொண்டு சென்று விற்க அனுமதி வழங்கப்பட்டதை அடுத்து இப்பகுதியிலிருந்து பெருமளவு விவசாயிகள் தமது உற்பத்திப் பொருள்களைக்கிளாலியூடாக சாவகச்சேரிக்கு சைக்கிள்களில் கொண்டு வந்தனர்.

இதுவரை அறுவடைசெய்த விவசாயப் பொருள்களை அவர்கள் கால்நடைகளுக்கு தீவனமாக பயன்படுத்தி வந்ததாகத் தெரிவிக்கப்பட்டது (6-117)

## மருந்தாளர் நியமனம்

திருநெல்வேலி, ஏப். 17

யாழ். போதனா வைத்தியசாலையில் கடந்த மாதம் தங்கள் ஒரு வருடகால உள்ளகப் பயிற்சியை பூர்த்தி செய்த 12 மருந்தாளர்களில் மூன்று பேருக்கு யாழ். மாவட்டத்தில் நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

பருத்தித்துறை (மந்திகை) ஆதார வைத்தியசாலையில் இருவருக்கும், வல்வெட்டித்துறை அரசினர் மாவட்ட வைத்தியசாலையில் ஒருவருக்கும் இந்த நியமனம் கிடைத்துள்ளது. ஐ—135-15)

## பாடசாலை திருத்த வேலைக்கு உதவி

நெடுந்தீவு, ஏப்ரல் 17

அனலைதீவு சதாசிவம் மகா வித்தியாலயத்தில் மலசல கூடங்களை அமைப்பதற்கான உதவிகளை ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனம் வழங்கியுள்ளது.

இந்த வித்தியாலய கட்டடத் திருத்தவேலைகள் 3 லட்சம் ரூபா செலவில் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக வித்தியாலய அதிபர் எஸ். கணேசமூர்த்தி தெரிவித்தார். (ஐ—111)

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில் 18-12-1989

இறைவன் அடியில் 21-04-1997

### செல்வி நிஷாந்தினி கந்தசாமி

(சுண்டுக்குளி மகளிர் கல்லூரி மாணவி)

திதி: 17-04-2000

எங்கள் அன்புச் செல்வமே!
ஆறாத் துயரில் ஆழ்த்தி ஆண்டுமூன்று சென்றதம்மா!
ஆண்டு பல சென்றிடினும் நீபேசிய அன்பு மொழிகள்
—என்றும்
எம் உணர்வுகளில் ஒலித்துக்கொண்டிருக்குமம்மா
எம் மனங்களில் வாடா மலரம்மா உன்எழிலுருவம்

உன் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

குடும்பத்தினர்.

167, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

(சி/11837)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



மலர்வு 04 — 11 — 1919

உதிர்வு 18 — 03 — 2000

### ஞானப்பிரகாசம் அருளப்பா

"சீவியத்தில் நேசித்தோரே
மரணத்திலும் என்னை மறவாதீர்கள்"

இரக்கமுள்ள தந்தையே - உமது
அடியானாகிய அருளப்பாவுக்கு
நித்திய இளைப்பாற்றினை அளித்தருளும்.

அன்னாரின் ஆன்மா இளைப்பாற்றுக்காக பண்டத்தரிப்பு புனித பற்றிமா மாதா ஆலயத்தில் இன்று (17-04-2000) திங்கட்கிழமை காலை இரங்கற்திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

பிரிவால் துயருறும்
மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

பற்றிமா வீதி,
பண்டத்தரிப்பு.

(75444)

## ஆயுத ஏற்றுமதி: ரஷ்யாவுக்கு 2 ஆம் இடம்

மொஸ்கோ, ஏப்ரல் 17

ரஷ்யா இன்னும் ஓரிரு ஆண்டுகளில் உலகின் இரண்டாவது பெரும் ஆயுத ஏற்றுமதி நாடாக விளங்கும் என்று ஆயுத விற்பனைக்குப் பொறுப்பான ரஷ்ய அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

தற்போது ஆயுத ஏற்றுமதி நாடுகளில் அமெரிக்கா முதல் இடத்திலும், பிரிட்டன், பிரான்ஸ் முறையே இரண்டாவது, மூன்றாவது இடங்களிலும் உள்ளன. ரஷ்யா நான்காவது இடத்தில் உள்ளது.

ஒரு காலத்தில் இந்தப்பட்டியலில் ரஷ்யா முதல் இடத்தில் இருந்தது குறிப்பிடத்தக்கது. [ஐ-6-ரி-5]

### அரசு, எதிர்க்கட்சியின் கொள்கைகளால்

# பிரிட்டனில் அகதிகள் மீது வன்முறை புரியும் ஆபத்து!

லண்டன், ஏப்ரல் 17

பிரிட்டனில் அகதிகளாகத் தஞ்சம் புகுந்துள்ள வெளிநாட்டவர்கள் மீது இனரீதியான வன்முறைகள் கட்டவிழ்த்து விடப்படும் அபாயம் தோன்றி உள்ளதாக அகதிகளுக்கான ஐ. நா. தூதரகம் அச்சம் வெளியிட்டுள்ளது.

பிரிட்டிஷ் ஆளும் கட்சியான தொழிற்கட்சியும் எதிர்க்கட்சியான கன்சர்வேடிவ் கட்சியும் [பிரிட்டனில் அரசியல் தஞ்சம் கோரும் அகதிகள் தொடர்பாகக் கடைப்பிடித்து வரும் கடும் போக்குக் கொள்கையைக் கண்டித்து வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றிலேயே அகதிகளுக்கான ஐ நா. தூதரகம் இதனைத் தெரிவித்துள்ளது.

பிரிட்டிஷ் அரசியல்வாதிகள் அகதிகள் குறித்துத் தெரிவித்து வரும் கருத்துக்கள் இனரீதியிலான வன்முறைகள் ஏற்பட வழிவகுக்கும்.

1990 ஆம் ஆண்டு மேற்கு ஜேர்மனியில் தஞ்சமடைந்திருந்த கிழக்கு ஜேர்மனிய அகதிகள் மீது மேற்கொள்ளப்பட்ட வன்முறைகள் போன்று பிரிட்டனிலும் ஏற்படக்கூடிய அபாயம் இதனால் தோன்றி உள்ளது.

இதனைக் கருத்திற்கொண்டு பிரிட்டிஷ் அரசியல்வாதிகள் மிக அவதானமாக நடந்துகொள்ள வேண்டும் என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## செய்தித் துளிகள்

### படகு விபத்தில் 56 பேர் உயிரிழப்பு

மணிலா, ஏப்ரல் 17

தெற்கு பிலிப்பைன்ஸில் ஜோலோ தீவுக்கருகில் பயணிகள் படகு ஒன்று விபத்துக்குள்ளானதில் குறைந்தது 56 பேர் உயிரிழந்திருக்கலாம் என்று அஞ்சப்படுகிறது

அளவுக்கு அதிகமாக ஆள்களை ஏற்றியதாலேயே படகு கவிழ்ந்து விபத்து ஏற்பட்டது என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதுவரை 70 பேர் மீனவர்களால் காப்பாற்றப்பட்டதாகவும் ஒருவர் இரண்டு மைல் தூரம் நீந்திக் கரைசேர்ந்து உயிர் தப்பியதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-6-ரி-5)

### அமெரிக்கா ஆத்திரம்

பெல்கிரேட், ஏப்ரல் 17

நேட்டோ தாக்குதல்களின் பின்னர் உலக அரங்கில் இருந்து தனிமைப்படுத்தப்பட்டுள்ள யூகோஸ்லாவியாவுக்கு புதிய தூதர் ஒருவரை ஆஸ்திரேலியா அனுப்பியுள்ளது.

இந்த நடவடிக்கை அமெரிக்காவை ஆத்திரமூட்டியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஆஸ்திரேலியாவின் இந்த செயல் யூகோஸ்லாவியாவுக்குச் சர்வதேச ரீதியில் அங்கீகாரத்தை மீண்டும் பெற்றுத்தர வழிவகுக்கும் என்று அமெரிக்கா நம்புவதே இதற்குக் காரணம் என்று கூறப்படுகிறது. (ஐ-6-ரி-5)

### தமிழக முதல்வர் தலைமையில் குழு அமைப்பு

சென்னை, ஏப்ரல் 17

தமிழகத்தில் தொழில் நுட்பக்கல்வியை தமிழ் மூலம் கற்பிப்பதற்கான ஆலோசனைகளை வழங்க முதல்வர் கருணாநிதி தலைமையில் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. (ஐ-6-ரி-5)

### இந்திய மாநிலங்களில் கடும் வரட்சி

புதுடில்லி, ஏப்ரல் 17

இந்தியாவின் குஜராத், ராஜஸ்தான் மற்றும் ஒரிசா மாநிலங்களில் கடும்வெயில் காரணமாக கொடிய வரட்சி நிலவுகிறது.

வரட்சி காரணமாக மக்கள் இடம்பெயர்ந்தவாறு உள்ளனர். இந்த மாநிலங்களில் விவசாயமும், கால்நடை வளர்ப்பும் முக்கிய தொழில்களாக இருப்பதால் மாநில பொருளாதாரத்தில் பெரும் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. (ஐ 6-ரி-5)

### சுஹார்ட்டோவுக்கு அனுமதி மறுப்பு

ஜகார்த்தா, ஏப்ரல் 17

இந்தோனேசியாவின் முன்னாள் அதிபர் சுஹார்ட்டோ தலைநகரை விட்டு வெளியே செல்லக்கூடாது என அரசு தடை விதித்துள்ளது.

இதனை மீறிச்செயற்பட்டால் அவர் வீட்டுக்காவலில் வைக்கப்படுவார் என்றும் எச்சரிக்கப்பட்டுள்ளது.

அதேநேரம் சுஹார்ட்டோவின் வீட்டருகே நூற்றுக்கணக்கான மாணவர்கள் அவரைச் சிறையில் அடைக்கக்கோரி போராட்டம் நடத்தினார்கள். [ஐ-5 6-ரி]

### சீனாவில் ஆண்டு தோறும்

## இரண்டரை லட்சம் மக்கள் காசநோயினால் மரணம்!

பெய்ஜிங், ஏப்ரல் 17

சீனாவில் ஆண்டு தோறும் காசநோயின் தாக்கத்தால் 2 லட்சத்து 50 ஆயிரம் பேர் உயிரிழப்பதாக அண்மையில் வெளியிடப்பட்ட ஆய்வு அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுவரை சீனாவில் சுமார் 30 லட்சம் மக்கள் காச நோயால் பீடிக்கப்பட்டுள்ளதாகவும் கணக்கிடப்பட்டுள்ளது. மருத்துவம் மூலம் இலகுவில் குணப்படுத்தக்கூடிய இந்த நோய் சீனாவில் தீவிரமாகப் பரவி வருவதற்கு அங்கு நிலவி வரும் வறுமையே முக்கிய காரணம் என்று அந்த ஆய்வில் மேலும் கூறப்பட்டுள்ளது.

காற்று மூலம் பரவும் இந்த நோயை உடனடியாகக் கட்டுப்படுத்தவில்லையானால் அது பெரும் பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தும் என்றும் அந்த ஆய்வில் எச்சரிக்கப்பட்டுள்ளது.

உலகம் முழுவதும் இதுவரை 200 கோடி மக்கள் காசநோயால் பீடிக்கப்பட்டுள்ளதாகக் கணக்கிடப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. (ஐ-5-6-ரி)

## வடகொரியா, ஈரான் மீது அமெரிக்கா புதிய தடைகள்

வாஷிங்ரன், ஏப்ரல் 17

வடகொரியா மற்றும் ஈரான் ஆகிய நாடுகளுக்கு எதிராக அமெரிக்கா புதிய பொருளாதாரத் தடைகளை விதித்துள்ளது.

'ஸ்கட்' ஏவுகணை தொடர்பான தொழில் நுட்பத்தை வடகொரியா, ஈரானுக்கு வழங்கியதாகத் தெரிவித்தே இரு நாடுகள் மீதும் இந்தக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டதாக வாஷிங்ரனில் அதிகாரிகள் தெரிவித்தனர்.

இரண்டு ஆண்டுகளுக்கு நீடிக்கும் இந்தத் தடையினால் புதிய வர்த்தக ஒப்பந்தம் மற்றும் ஏற்றுமதி அனுமதிப்பத்திரங்கள் வழங்கல் ஆகியன ரத்துச் செய்யப்படுவதுடன் ஏவுகணை மற்றும் அது தொடர்பான தொழில் நுட்பம் ஆகியவற்றின் பரிமாற்றங்களும் கட்டுப்படுத்தப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது. (ஐ 6-ரி-5)

### பிரான்ஸ் விஜயம்

புதுடில்லி, ஏப்ரல் 17

இந்திய ஜனாதிபதி கே.ஆர். நாராயணன் பிரான்ஸிற்கு ஐந்து நாள் உத்தியோக பூர்வ விஜயம் மேற்கொண்டு நேற்று அங்கு போய்ச் சேர்ந்தார்.

அவர் அங்கு பிரான்ஸ் அதிபர் ஷிராக் மற்றும் பிரதமர் வியோனிடேஸ்வின் ஆகியோரைச் சந்தித்துப் பேச்சு நடத்துவார்.

இந்திய ஜனாதிபதி ஒருவர் பிரான்ஸிற்கு விஜயம் செய்வது இதுவே முதல் முறை என்பது குறிப்பிடத்தக்கது.

## அமெரிக்கா கவலை கொள்ளத் தேவையில்லை

ஜெருசலேம், ஏப்ரல் 17

உயர்தொழில் நுட்ப வலுவுள்ள 'ராடர்களை' இஸ்ரேல் சீனாவுக்கு விற்பது குறித்து அமெரிக்கா கவலை கொள்ளத் தேவையில்லை என இஸ்ரேலிய வெளியுறவுத் துறை அமைச்சர் டேவிட் லெவி கூறியுள்ளார்.

இந்த 'ராடர்' விற்பனைக்கு அமெரிக்கா எதிர்ப்புத் தெரிவித்தது தொடர்பாகச்செய்தியாளரிடம் கருத்துக் கூறிய அவர் இவ்வாறு தெரிவித்தார்.

நாம் அமெரிக்காவுக்குத் தெரியாமல் எதனையும் செய்யப் போவதில்லை. அமெரிக்க தொழில்நுட்பங்கள் எவற்றையும் வேறு நாடுகளுக்கு வழங்கப் போவதும் இல்லை என்றும் அவர் மேலும் கூறினார்.

சீன அதிபர் ஜியாங்ஜெமினும் அப்போது உடன் இருந்தார். [5-6-ரி]

# பலஸ்தீன சுயாட்சியை இஸ்ரேல் அடுத்த மாதம் அங்கீகரிக்கும்?

ஜெருசலேம், ஏப்ரல் 17

இஸ்ரேலுக்கும், பலஸ்தீனத்துக்கும் இடையில் அடுத்த மாத இறுதியில் கைச்சாத்திடப்படவுள்ள உடன்படிக்கை ஒன்றின் பின்னர் இஸ்ரேலியப் பிரதமரால் பலஸ்தீன சுயாட்சி அங்கீகரிக்கப்படும் என இஸ்ரேல் தொலைக்காட்சி தெரிவித்துள்ளது.

### உலக அரங்கில்

இதேசமயம் —

மேற்குக் கரை மற்றும் காஸா பள்ளத்தாக்கு ஆகிய பிரதேசங்களிலிருந்து இஸ்ரேலிய இராணுவம் வெளியேறிய நிலப்பகுதிகளில் பலஸ்தீனிய சுயாட்சி ஒன்றை இஸ்ரேல் அங்கீகரிக்கும் என்று இஸ்ரேலிய அதிகாரிகளும் தெரிவித்துள்ளனர்.

அடுத்த மாதம் கைச்சாத்திடப்படவுள்ள உத்தேச உடன்படிக்கையில் வருங்கால பலஸ்தீன சுயாட்சிப் பிரதேசத்தின் எல்லைகள் வகுக்கப்படும். பின்னர் செப்ரெம்பரில் இறுதி உடன்படிக்கை கைச்சாத்திடப்படும் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதனைத் தொடர்ந்து பல ஆண்டுகளாக நடைபெற்று வரும் பலஸ்தீன சுதந்திரப் போராட்டம் சுமுகமாக ஒரு முடிவுக்கு வரும் என்று நம்பப்படுகிறது. (ஐ-6-ரி 5)

## தென்கொரியத் தேர்தலில் ஜனநாயகக் கட்சி வெல்லும்?

சியோல், ஏப்ரல் 17

தென் கொரியாவில் விரைவில் நடைபெற உள்ள பொதுத் தேர்தலில் தற்போதைய ஜனாதிபதி கிம்டே ஜங்கின் ஜனநாயகக் கட்சி அதிக இடங்களைப் பெறும் என்று கருத்துக் கணிப்புகள் தெரிவிக்கின்றன.

கடந்த 50 ஆண்டுகளாகப் பகைமை கொண்டிருந்த வடகொரியாவுடன் மீண்டும் உறவுகளை ஏற்படுத்தும் கிம்மின் முயற்சியே இதற்குக் காரணம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

273 உறுப்பினர்களைக் கொண்ட தேசியசபையில் கிம்மின் கட்சி 132 ஆசனங்களைக் கைப்பற்றக் கூடும் என்றும் கருத்துக் கணிப்புகள் கூறுகின்றன. (ஐ 5-6-ரி)

# இலங்கைச் சிறையில் என்னை கொடுமைப்படுத்துகிறார்கள்

## இந்திய மீனவர் உறவினருக்குக் கடிதம்

சென்னை, ஏப்ரல் 17

"வீடு திரும்பினால் தான் எனது உயிர் கையிலிருக்கும்" இவ்வாறு தனது தந்தைக்குக் கடிதம் எழுதி உள்ளார் இலங்கைச் சிறையில் அடைக்கப்பட்டுள்ள இந்திய மீனவர் ஒருவர்.

தமிழகம் இராமேஸ்வரத்தைச் சேர்ந்த சுடலைமணி என்ற மீனவரே இவ்வாறு கடிதம் எழுதி உள்ளார். தமிழக — இலங்கைக் கடற்பகுதியில் மீன் பிடித்துக் கொண்டிருந்தபோது இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழைந்ததாகத் தெரிவித்து கடற்படையினரால் இவர் கைது செய்யப்பட்டிருந்தார்.

"எனக்கு உடல் நிலை சரியில்லை. என்னை மிகவும் கொடுமைப் படுத்துகிறார்கள். இறைவன் இவ்வளவு கஷ்டத்தைக் கொடுப்பான் என்று நான் கனவிலும் நினைக்கவில்லை. தினமும் அழுது கொண்டே இருக்கிறேன்" என்று அவர் தனது கடிதத்தில் மேலும் தெரிவித்துள்ளார். (ஐ-5-6-ரி)

# வெளிநாட்டவர் பிரதமர் ஆகுவதா?

## மேனகா காந்தி ஆட்சேபம்

புதுடில்லி, ஏப்ரல் 17

வெளிநாட்டில் பிறந்த ஒருவர் இந்தியாவின் பிரதமராகலாமா என்பது குறித்து அரசமைப்பு மறு ஆய்வுக்குழு ஆராயவேண்டும் என்று இந்திய மத்திய சமூக நலத்துறை அமைச்சரும் இந்திரா காந்தியின் இரண்டாவது மருமகளுமான மேனகா காந்தி கோரி உள்ளார்.

புதுடில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர் இதனைக் கூறினார்.

இராணுவத்தில் பணி புரியும் ஒருவர் வெளிநாட்டவரைத் திருமணம் செய்தால் பதவி உயர்வு மறுக்கப்படும் போது வெளிநாட்டவர் நாட்டின் பிரதமர் ஆவதை எப்படி அனுமதிக்க முடியும்?

இவ்வாறு அவர் கேள்வி எழுப்பினார்.

தான் பிரதமராவதைத் தடுக்கவே பாரதிய ஜனதா அரசு அரசமைப்பில் மாற்றம் செய்வதாகக் காங்கிரஸ் தலைவர் சோனியா குற்றம் சாட்டி வருகிறார்.

இதற்குப் பதிலடியாக மேனகா காந்தியை பா. ஜ. க. களத்தில் இறக்கியுள்ளதாக அரசியல் விமர்சகர்கள் கருதுகிறார்கள். (ஐ-5-6-ரி)

# உயிரிழந்த 12 புலிகளின் விவரங்கள் அறிவிப்பு

வவுனியா, ஏப்ரல் 17
தொடரும் 'ஓயாத அலைகள் 3' நடவடிக்கையில் மேலும் 12 புலிகள் உயிரிழந்துள்ளதாக 'புலிகளின் குரல்' வானொலி நேற்று அறிவித்தது.

உயிரிழந்தவர்களின் விவரம் வருமாறு:-

★ மேஜர் கவிதரன் (சேரன் சிங்கம் கிருஷ்ணகாந்தன் — யாழ்ப்பாணம்)

★ மேஜர் அகல்நெஞ்சன் (வெற்றிவேல் தில்லைநாதன்—யாழ்ப்பாணம்)

★ மேஜர் அருள்மணி (பிள்ளையான் புண்ணியமூர்த்தி— மட்டக்களப்பு)

★ லெப்டினன்ட் புகழ்மணி (நல்லையா நாகேந்திரம் — கிளிநொச்சி)

லெப்டினன்ட் செங்கதிர் (சித்திரவேலாயுதம் சிவநாதன்— பூநகரி)

★ 2 ஆம் லெப்டினன்ட் இளங்கோ (தனபாலசிங்கம் சஜீவன்—யாழ்ப்பாணம்)

★ 2 ஆம் லெப்டினன்ட் ஈழமணி (செல்வன் காந்தராசா — யாழ்ப்பாணம்).

★ 2 ஆம் லெப்டினன்ட் இசைவீரன் (கணபதிப்பிள்ளை சுரேந்திரன் — யாழ்ப்பாணம்).

★ 2 ஆம் லெப்டினன்ட் பாண்டியன் (கதிரவேலு புஸ்பராம் —முள்ளியவளை),

★ 2 ஆம் லெப்டினன்ட் கடல் நிலவன் (திருச்செல்வம் சுரேஸ்குமார் — முல்லைத்தீவு).

★ 2 ஆம் லெப்டினன்ட் கடல் வளவன் (பரஞ்சோதி மனோகரன் — மாங்குளம்).

★ 2ஆம் லெப்டினன்ட் தென்றல் அல்லது இளந்தென்றல் என அழைக்கப்படும் (கணபதிப்பிள்ளை கமலநாதன் — யாழ்ப்பாணம்)

[ஜ 9]


உ
சிவமயம்

## கைதடி வீரகத்திப்பிள்ளையார் ஆலய தேர்த் திருவிழா

இன்று (17-04-2000)

சித்திரைப் பூரணைத் திதியில் தேரிலே
பவனி வரும் கணநாதரே!
எங்களதும், நாட்டு மக்களதும்
சகல துன்பங்களையும் தீர்த்து
அருள்பாலிக்க வேண்டி
உமது பாதார விந்தங்களை
சரணடைகின்றோம்.

**ஓம் முருகா நகைமாடம்**
கைதடி.
**மகாலக்ஷ்மி நகைமாடம்**
இருபாலை.
**ஓம் முருகா நகைமாடம்**
கொடிகாமம் (சி/11865)



## வேண்டுகோள்

கருணை மிக்க கனவான்களே!
எம்மிடத்தில் வறிய அனாதைக் குழந்தைகள் வயது 7 தொடக்கம் 15 வரையுள்ள பெண்பிள்ளைகள் அடைக்கலம் கோரி வந்துள்ளனர் (21 பேர்) அவர்களை ஆதரியுங்கள் பணஉதவி புரிந்து அவர்களுக்கு வாழ்வழியுங்கள்.

சுவாமி அம்மா
திருப்பதி ஆச்சிரமம்,
பெரியபுலவ்ளவு,
தெல்லிப்பழை கிழக்கு, தெல்லிப்பழை. (75473)



## மது கல்வி நிறுவனம்

டச்சுவீதி கோப்பாய் தெற்கு, கோப்பாய்.

**O/L பகல்நேர வகுப்புகள்**
ஆரம்பம் 20-04-2000 வியாழன்
காலை 7-00 மணி

★ அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால் உடன் உங்கள் அனுமதிகளை உறுதிப்படுத்தவும்

- அதிபர்

(சி/11866)



அராலி

## ஸ்ரீ முருகன் சனசமூக நிலையத்தின் அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு முடிவுகள்

முதலாம் பரிசு இல. 0810
இரண்டாம் பரிசு இல. 1107
மூன்றாம் பரிசு இல. 0103

பரிசில்களை ஞாயிற்றுக்கிழமைக்கு (23-04-2000) முன்னர் எமது காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம். நன்றி.

(75474) கௌரவ செயலாளர்


## கிரிக்கெட் ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 17
நல்லூர் ஐக்கிய விளையாட்டுக் கழகம் நடத்தும் மென்பந்துக் கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் இன்று இடம்பெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:-

★ காலை 9.00 மணிக்கு— நியூலங்கா வி.க. எதிர் குயிக் ஸ்ரார் வி.க.

★ காலை 10-30 மணிக்கு— ஜி. பி. எஸ் வி.க. எதிர் கொய்யாத்தோட்டம் வி.க.

★ நண்பகல் 12-00 மணிக்கு — அரியாலை ஐக்கிய வி.க. 'ஏ' அணி எதிர் நியூ பெப்சி வி.க.

★ பிற்பகல் 2-00 மணிக்கு — நொதேண் வி.க. 'பி' அணி எதிர் வேளாங்கன்னி வி.க.

இந்த ஆட்டங்கள் விநாயகர் வி.க. மைதானத்தில் இடம்பெறும்.

★ காலை 9.00 மணிக்கு— கோல்டன் ஈகிள்ஸ் வி.க. அணி எதிர் வில்ஸ் வி.க. 'ஏ' அணி.

★ காலை 10.30 மணிக்கு — சீ ஹொக்ஸ் வி.க. 'ஏ' அணி எதிர் துர்க்கா வி.க. அணி.

★ பிற்பகல் 2 மணிக்கு — யுவானியர் வி.க. எதிர் மிலேனியம் வி.க.

இந்த ஆட்டங்கள் கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய மைதானத்தில் இடம்பெறும். (இ-3-8)

## வில்லூன்றியில் நாளை தீர்த்தம்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 17
வில்லூன்றி புனித தீர்த்தத்தில் சித்திராப் பௌர்ணமி தினமான நாளை செவ்வாய்க்கிழமை மக்கள் தீர்த்த சங்கற்பம் செய்து தீர்த்தமாடவும் பிதிர்த் தர்ப்பணங்கள் செய்து கொள்ளவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

தீர்த்தோற்சவம் நாளை காலை 6.45 மணிக்கு வசந்த மண்டபப்பூசையுடன் ஆரம்பமாகும். காலை 8 மணிக்கு தீர்த்தசவாரியும் 8.15 மணிக்கு பொதுமக்கள் தீர்த்த சங்கற்பம் செய்து தீர்த்தமாடி பிதிர்த்தர்ப்பணம் செய்தலும் 9 மணி முதல் 10 மணி வரை தீர்த்தக் கட்டடத்தில் அனுக்கிரகமும் 10 மணிக்கு சுவாமி கோயிலுக்கு எழுந்தருளலும் இடம்பெறும். (க)


## புலமைப்பரிசில் 2000

09-04-2000 அன்று நடைபெற்ற பரீட்சையில் அதிகூடிய புள்ளிகள் பெற்றோர்.

| | |
|---|---|
| கை. தனுஷன் யா. பரி. கல். | 157 |
| யோ. தர்ஷிகா யா. இ. ஆ. பா. | 153 |
| ஜெ. இருந்திகா யா. இ. ஆ. பா. | 153 |
| ம. திபா யா. அர். சை. பி. வித். | 152 |
| ச. லக்ஷிகா யா. இ. ஆ. பா. | 149 |
| ம. லக்ஷன் | 149 |
| ஜெ. பிரதீபா இராம. ம. வி. | 147 |
| த. சுவாஸ்கர் யா. கொ. இ. ஆ. பா. | 146 |
| அ. சிறிஹரி வசா. சிறி. வே. பி. வித். | 145 |
| வி. நிவேதா யா. கோ. நா. வித். | 144 |

தரம் (2—8) மாதாந்தப் பரீட்சை 18—04—2000 செவ்வாய்க்கிழமை நடைபெறும்.

**BOND**
யாழ்நகர்.
[75479]



## நகரின் மத்தியில் 24 மணி நேர தனியார் வைத்திய சேவை

- வெளி நோயாளர் பிரிவு
- உள்ளக நோயாளர் பிரிவு
  — வைத்திய நிபுணர்களின் கீழ்
- ஆய்வுகூடம்
- மருந்தகம்
- வைத்திய நிபுணர் ஆலோசனைப் பிரிவு

புதிதாக
குழந்தைகள் வைத்திய நிபுணர் சேவை
கிழமை நாள்களில் பி-ப. 4.30 — 6.30 மணி
சனிக்கிழமை பி-ப. 2.00 — 4.30 மணி

முன் பதிவுகள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.

**யாழ். வைத்திய நிலையம்**
வேம்படி,
166, 1 ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.
(75482)


யாழ் இந்து மகளிர் கல்லூரி

## இன்ரறக்ட் கழகம்

மேற்படி கல்லூரியின் இன்ரறக்ட் கழக பொறுப்பாசிரியர்கள், சகல அங்கத்தவர்கள் அனைவரையும் திங்கட்கிழமை (17-04-2000) பிற்பகல் 3.00 மணிக்கு கல்லூரிக்கு வருகை தருமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

- பொருளாளர்

(75484]

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரி ஆசிரியர்
திரு. க. மோகனதாஸ் அவர்களின்
அன்புத் தாயார்

**திருமதி கந்தையா சிவகாமிப்பிள்ளை**

அவர்களின் பிரிவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் கழகம்.
யா/கொக்குவில் இந்துக்கல்லூரி.
(சி/11867)

## மரண அறிவித்தல்கள்

### கார்த்திகேசு சொக்கநாதர்

நாவற்குழியைப் பிறப்பிடமாகவும் நல்லூரை வதிவிடமாகவும் கொண்ட ஓய்வுபெற்ற கார்த்திகேசுவின் மகன் சொக்கநாதர் (சோதிடர்) 15-04-2000 சனிக்கிழமை சிவபதம் அடைந்தார்.

இவர் காலஞ்சென்ற வைத்தியர் கார்த்திகேசு சுப்பிரமணியத்தின் சகோதரனும், சண்முகநாதபிள்ளையின் மைத்துனரும் ஸ்ரீதரன், ஸ்ரீபவன், ஸ்ரீபதி, கலாஸ்ரீ, ஸ்ரீரதி, ஸ்ரீராதா ஆகியோரின் சிறிய தகப்பனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (16-4-2000) ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றன என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்
சு. பொ. நல்லைநாதன்
(C E B. ஊழியர்)
50/40, செட்டித்தெரு,
நல்லூர்.
யாழ்ப்பாணம். (75483)

### திருமதி சுப்பிரமணியம் ஆச்சாரி பசுபதி

திருகோணமலை சேனையூர் கிராமத்தைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சுப்பிரமணியம் ஆச்சாரி பசுபதி நேற்று (16-04-2000) ஞாயிற்றுக்கிழமை சிவபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியம் ஆச்சாரியின் அன்பு மனைவியும் மகாலெட்சுமி, பாஸ்கரன், சொர்ணலட்சுமி (பிரான்ஸ்), சரவணபவன் ஆகியோரின் அன்புத் தாயாரும் இராசரெட்ணம், இராமகிருஷ்ணன் (பிரான்ஸ்), திவ்வியமலர், சத்தியபாமா ஆகியோரின் அன்பு மாமியாரும் ஜானகி, சுஜேந்திரன், சுஜபாமினி, கலைவாணி, தாரணி, பிரணவன், பிரான்ஸில் வசிப்பவர்களான சோபிதா, சுரனுதா, சுலக்ஷிகா மற்றும் கௌரிசங்கர், கௌரீஸ்வரன், ரசிகப்பிரியா, கௌசிகரன், மதிவதனி ஆகியோரின் பேர்த்தியாரும் ஜனனி, ஜனுஷன் ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17-04-2000) திங்கட்கிழமை காலை 9-30 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பையன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

தகவல்:
சு. பாஸ்கரன் ஆச்சாரி
(மகன்)
34, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம். (75482)

# உதயன்

## ஓர்மம் வருமா?

இனப்பிரச்சினைக்குத் தீர்வு ஒன்றைக் காணும் இலங்கை அரசாங்கத்தின் முயற்சிக்கு உதவுவதற்கு நோர்வே அரசு உத்தியோக பூர்வமாக முன்வந்தமை பழைய செய்தி. நோர்வேயின் இந்த உதவியை நாட்டின் மூவினமக்களும்வரவேற்றனர். நீண்ட காலமாக இந்த நாட்டை உலுக்கிக் கொண்டிருக்கும் இந்தப் பிரச்சினைக்கு நீதியான ஒரு தீர்வைக் காண்பதற்கு நல்ல தருணம் வந்திருப்பதாக மூன்று இனங்களையும் சேர்ந்த சமாதான விரும்பிகள் மகிழ்வடைந்தனர்.

ஆனால் தென்னிலங்கையின் சிங்களக் கடுங்கோட்பாளர்களும், பௌத்த பிக்குமாரும் அதனை ஆட்சேபித்து நடத்திய ஆர்ப்பாட்டங்கள் மற்றும் போராட்டங்கள் சமாதான விரும்பிகளின் மனமகிழ்வை மங்கச் செய்துள்ளது.

சமாதானப் பேச்சுக்கள் மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணவேண்டும்; போரை முடிவுக்குக் கொண்டு வர வேண்டும்; என்ற ஆணையைக் கடந்த டிசம்பர் மாதத்தில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில்மக்கள் வழங்கியிருந்தனர்.

ஆனால் பௌத்த மகா நாயக்கர்களினதும், பேரின வாதிகளினதும் எதிர்ப்புக்கு மத்தியில் ஜனாதிபதியினால் — அரசாங்கத்தினால் — நோர்வேயின் உதவியுடன் தீர்வு ஒன்றைக் காணமுடியுமா என்ற வினாவே இப்போது தெற்கிலும் சரி, வடக்கிலும் சரி எழுந்துள்ளது. சமாதான விரும்பிகளின் அச்சமும் அதுவாகவே உள்ளது.

சமாதான வழியிலான அரசியல் பேச்சுக்கள் மூலம் தீர்வு ஒன்றைக் காணவேண்டும் என்ற ஆணை ஜனநாயக ரீதியானது. மக்களின் தீர்ப்பும் விருப்பமும் அதுவே. ஆனால் பௌத்த மகாநாயக்கர்களின் அவர்தம் மதத்திற்கு முரணான போக்கும், பேரின வாதிகளின் எதிர்ப்பும் ஜனநாயகத்தை கேள்விக்குறியாக்கி உள்ளன. பேரினவாதம் ஜனநாயகத்தின் மீது மேலாண்மை, மேலாதிக்கம் செலுத்தும் நிலை மீண்டும் தோன்றியுள்ளது.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் மட்டுமன்றி, ஏனைய பல முக்கிய தேசிய விவகாரங்களிலும் பேரினவாதம் ஆதிக்கம் செலுத்தியமையே இந்த நாட்டின் வரலாறாக உள்ளது. பல சந்தர்ப்பங்களில் பேரினவாதம் ஜனநாயகத்தைச் சரித்து வீழ்த்தி, தான் நினைத்ததைச் சாதித்ததும் உண்டு.

இதற்குக் காரணம், தென்னிலங்கை அரசியல் தலைவர்கள் தமது சுய அரசியல் லாபம் கருதி பேரினவாதத்தின் செல்வாக்குக்கு ஆட்படுவதாகும். இது தென்னிலங்கை அரசியலில் கல்மேல் எழுத்துப் போன்று ஆழமாகத் தென்னிலங்கை அரசியலில் பதிந்துள்ளது.

இம்முறையாவது பேரினவாதத்தை ஜனநாயகம் வெல்லவேண்டும்; அடிபணிந்து விடலாகாது என்ற ஓர்மத்துடன் தென்னிலங்கை அரசியல் தலைவர்கள் செயலாற்ற வேண்டும். போர் என்ற போர்வையில் தமிழ்ப் பகுதிகளின் இயற்கை வளங்களை அழித்தும், தமிழர்களின் வாழ்வைச் சின்னாபின்னப்படுத்தியும் சீரழித்தது போல, தெற்கையும் அழிவுப்பாதைக்கு இட்டுச்செல்லலாகாது என்ற சிந்தனையேனும் அவர்களிடம் பிறக்குமா?

ஆட்சித் தலைவர்கள், அரசியல் தலைவர்கள் இராணுவ வல்லாதிக்கத்துக்கு இடங்கொடுப்பது போல, பேரினவாதத்துக்கு இனியும் ''அடிமை''களாகின்ற இந்த நாடு மேலும் சீரழியும் என்பதனையும் மறந்துவிடாமல் செயற்படவேண்டிய வேளை இது. செய்வார்களா?

# முக்கிய தொழில் சட்டங்கள் சில விளக்கக் குறிப்புகள்

பொது அபிப்பிராயமாக 'தொழில்' என்ற சொல் 'தொழிலாளி' என்ற பதத்தை உள் அர்த்தமாகக் கொண்டிருக்கின்றது. ஆனால் 'தொழில்' என்பது தொழில் நுட்ப, தொழில்ரீதியான முகாமைத்துவ, எழுதுதல், உடல் சார்ந்த தொழில்துறையிலாவது உடல் உழைப்பு அல்லது உள உழைப்பு வகை வேலைகளைச் செய்வதை உள்ளடக்குகின்றது. பல வகையான தொழில்களில், சிலர் சம்பளத்திற்காகவும் ஊதியத்திற்காகவும் அல்லது உழைப்பிற்காகவும் தொழில் புரிகின்றனர். அங்கு தொழில் தருநர் - தொழில் செய்பவர் அல்லது எசமானன் - வேலையாள் என்ற தொடர்பு இருக்கின்றது. மற்றையவர்கள் சுயதொழில் புரிபவர்கள். அங்கு தொழில் புரிபவரே அவரது சொந்த எசமானாக இருக்கின்றார். அவர்கள் வேறு யாராலோ மற்றையவர்களாலோ கட்டுப்படுத்தப் படுவதில்லை.

## ஆர். தர்மலிங்கம்

உதவித்தொழில் ஆணையாளர், யாழ்ப்பாணம்.

தொழில் வகைகளில், தொழில் தருநரைப் பொறுத்து அரசாங்கத் துறை, கூட்டுறவுத்துறை, தனியார் துறை முதலியன இருக்கின்றன அதேபோன்று தொழில் முறைகளைப் பொறுத்து கைத்தொழில், பெருந்தோட்டம், சேவைகள், வீட்டுப் பணிகள் முதலியனவாக வகைப்படுத்தப்படுகின்றன.

இலங்கையில் உள்ள கிட்டத்தட்ட 45 தொழிற் சட்டங்களில் ஒன்று இரண்டு சட்டங்கள் மாத்திரம் அரசாங்க, உள்ளூராட்சி ஊழியர்களுக்கு ஏற்புடையதாகும். வீட்டுப்பணியாட்கள் சம்பந்தமாக மிகக் குறைந்த சட்டங்களே உள்ளன. அநேகமாக தொழிற்சட்டங்கள் அரச கூட்டுத்தாபனங்கள், வங்கிகள், சபைகள், அதிகாரசபைகள், தனியார் துறை ஆகியவற்றிற்குப் பொருந்தக் கூடியன. கூட்டுறவுத்துறை ஊழியர்களைப் பொறுத்தமட்டில் 1972 ஆம் ஆண்டு கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் வரவுக்குப் பின்னர் சில தொழிற்சட்டங்கள் அவர்களுக்குப் பொருந்துவதாக அமையவில்லை.

பொதுவாக தொழிற் சட்டங்கள், ஊழியர் சம்பந்தமான சம்பளமும்/வேதனமும் சேவை நிபந்தனைகள், சமூகப் பாதுகாப்பு, கைத்தொழில் பாதுகாப்பு, தொழில் உறவுகள் சம்பந்தமானவையாகும். சிலதொழிற் சட்டங்கள் விசேடமாக இந்திய வம்சாவழித் தொழிலாளர்கள், பெண்கள், சிறுவர்கள், குழந்தைகள் சம்பந்தமாகப் பொருத்தமுடையன.

இவ்வகையான ஒவ்வொரு சட்டமும் அரசாங்க அதிகாரிகளால் அமுல்படுத்தப்படுகின்றன. அநேகமான தொழிற் சட்டங்கள் யாவும் தொழில் ஆணையாளர் நாயகத்தினால் அமுல்படுத்தப்படுகின்றன. ஆனாலும் சில விதிவிலக்குகளும் உண்டு.

தொழிற் சட்டங்கள் முழுவதையும் தெளிவாகப் புரிந்துகொள்ளுதல் ஓரளவு சிக்கலான விசயமாகும். அவற்றில் கட்டளைச் சட்டங்கள் [சுதந்திரத்திற்கு முன்பு இயற்றப்பட்டவை] சட்டங்கள் (சுதந்திரத்திற்குப் பின் இயற்றப்பட்டவை). இந்தச் சட்டங்கள் ஆகியவை பிரதான சட்டங்களாகும். இவைகள் யாவும் நாடாளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்டவையாகும். அவசியம் ஏற்படும் பட்சத்தில்தொடர்ந்தும் திருத்தச் சட்டங்கள் நாடாளுமன்றத்தினால் நிறைவேற்றப்படும். இவைதவிட பிரதான சட்டங்களின் சரத்துக்களுக்கு அமைய உபவிதிகளான பிரமாணங்கள், கட்டளைகள், நியதிகள், அதிகாரபூர்வமான அறிக்கைகள் போன்றன யாவும் அரச வர்த்தமானியில் பகிரங்கப்படுத்தப்படுகின்றன. மேலும் 1941 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க சம்பள சபைகள் கட்டளைச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் அமைக்கப்பட்ட சம்பள சபைகளின் தீர்மானங்கள் 1953 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க கைத்தொழிற் பிணக்குகள் சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் உண்டாக்கப்பட்ட கூட்டு ஒப்பந்தங்கள் போன்றனவும் அரச வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டு சட்டவலுப் பெற்றுள்ளது. பிரதானவையும், துணை விதிகளும் எண்ணிக்கையில் அதிகமாக இருப்பதனால், அவை முழுவதையும் திரட்டுத்த முடியாதமையினால் சில முக்கியமான சட்டங்களின் தலைப்புக்கள் மாத்திரம்பல் வேறுபட்ட பிரிவுகளின் கீழ் இங்கு தரப்படுகின்றன.

### அ) சம்பளங்கள் / வேதனங்கள் சேவை நிபந்தனைகள்

★ கடை, காரியாலய ஊழியர் சட்டம்

★ சம்பள சபைகள் கட்டளைச் சட்டம்.

### ஆ) சமூகப்பாதுகாப்பு

★ ஊழியர் சேம நிதிச் சட்டம்

★ ஊழியர் நம்பிக்கை நிதியச் சட்டம்

★ பிரசவ நன்மைகள் கட்டளைச் சட்டம்

★ பணிக்கொடை கொடுப்பனவு சட்டம்

### இ) கைத்தொழில் பாதுகாப்பு

★ தொழிற்சாலைகள் கட்டளைச் சட்டம்.

### ஈ) தொழில் உறவுகள்

★ தொழிற் பிணக்குகள் சட்டம்

★ சேவை முடிவுறுத்தல் (விசேட சரத்துக்கள்) சட்டம்

★ தொழிற் சங்கங்கள் கட்டளைச் சட்டம்.

### உ) இந்திய வம்சாவழி தொழிலாளர்

இந்திய வம்சாவழித்தொழிலாளருக்கும் மற்றைய தொழிலாளருக்கும் சிலசட்டங்கள் பொதுவாக ஏற்புடையதாக இருப்பதனால் கீழே தரப்பட்ட சில சட்டங்கள் தற்போது வலுவிழந்துள்ளன.

★ நோய்கள் (தொழில்) கட்டளைச் சட்டம்

★ தோட்டத் தொழிலாளர் (இந்திய) கட்டளைச் சட்டம்.

★ தோட்ட காம்பறைகள் (விசேட சரத்துக்கள்) சட்டம்

★ இந்திய குடிவரவுத் தொழில் கட்டளைச் சட்டம்.

★ வைத்திய தேவைகள்கட்டளைச் சட்டம்.

★ ஆகக் குறைந்த வேதனம் (இந்தியத்தொழிலாளர்) கட்டளைச் சட்டம். துண்டு ஒழிப்புக் கட்டளைச் சட்டம்.

(தொடரும்)

# வவுனியா நலன்புரி நிலையங்களுக்கு 4 கோடி ரூபா ஒதுக்கப்பட்டது

வவுனியா,ஏப்ரல் 17

அக்தியாவசிய சேவைகள் ஆணையாளர் திணைக்களம் 4 கோடி ரூபாவை வவுனியாவில் உள்ள நலன்புரிநிலையங்களின் மேம்பாட்டுக்காக வழங்கியுள்ளதாக அரச அதிபர் கே. கணேஷ் தெரிவித்துள்ளார்.

மேற்படி நிலையங்களில் உள்ளவர்களுக்கு மே மாத இறுதியில் 3 மாத காலத்திற்கான வதிவிட அனுமதிப்பத்திரம் வழங்கப்படவுள்ளது.

நலன்புரி நிலையங்களின் அடிப்படைத் தேவைகளை மேம்படுத்த அகதிகளுக்கான ஐ.நா. தூதரகம், ஒக்ஸ்பாம் முல்லைத்தீவு ஜக்கல்விப் பிரிவு, சுகாதார வைத்திய அதிகாரி, புனர்வாழ்வுத் திட்டப்பணிப்பாளர், தேசிய இளைஞர் சேவைகள் மன்றம், வீதி அபிவிருத்தி அதிகார சபை உட்பட அரசாங்கத்திணைக்களங்களும் ஒன்றிணைந்து செயற்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

[ஐ-ரி]

# லீவு எடுக்கும் ஆசிரியர் மீது கவனம் செலுத்துமாறு பணிப்பு

வவுனியா, ஏப்ரல் 17

பாடசாலைகளுக்கு அடிக்கடி லீவு எடுக்கும் ஆசிரியர்கள் குறித்துக் கவனம் செலுத்துமாறும் —

இவ்விடயத்தில் உரிய அதிகாரங்களைப் பயன்படுத்தித் திருத்த நடவடிக்கையை எடுக்குமாறும் —

கல்வி, உயர்கல்வி அமைச்சு மாகாண, வலய மற்றும் கோட்டக் கல்விப் பணிப்பாளர்கள் மூலமாகப் பாடசாலை அதிபர்களுக்குச் சுற்றறிக்கை ஒன்றை அனுப்பியுள்ளது.

ஆசிரியர்கள் அதிகமாக லீவு எடுப்பதனால் பாடசாலையில் நிர்வாகம் செய்வதில் பெரும் நெருக்கடிகளை எதிர்நோக்க வேண்டியுள்ளதாகப் பாடசாலை அதிபர்கள் தொடர்ந்து முறையிட்டு வருவதாகவும் —

இதனால் மாணவர்களின் கல்வி நடவடிக்கைகள் பெரிதும் பாதிப்படைவதால் இவ்விடயத்தில் பாடசாலை அதிபர்கள் விசேட கவனம் செலுத்தவேண்டும் எனவும் —

அந்தச் சுற்றறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

(ஐ-9-164)

## நாளை

சித்திரை 6

செவ்வாய்க்கிழமை

திதி: பூரணை

முன்னிரவு 11.30 வரை.

நட்சத்திரம்: சித்திரை

பின்னிரவு 2. 11வரை

சித்திரா பூரணை விரதம்

சுபநேரம்: 10 32 — 12 02

ராகுகாலம்: 3.02 — 4.32

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

**உதய வாக்கு**

உனது காலில் ஓர் ஊசி தைத்தால் ''ஓ'' என்று அலறித் துடிக்கும் நீ மற்றவருக்கும் துன்பஞ் செய்ய ஒரு போதும் நினைக்காதே!

ஸ்ரீராமகிருஷ்ணர்

# தமிழ்த்தின போட்டிகள்

வலி. கிழக்கு ஏப்ரல் 18

கோப்பாய் கல்விக் கோட்டத்திற்குட்பட்ட பாடசாலைகளுக்கிடையிலான தமிழ்த்தினப்போட்டிகள் எதிர்வரும் 28 ஆம் திகதி சுந்தியாயர் இந்துக் கல்லூரியிலும், 29ஆம் திகதி கோப்பாய் கிறீஸ்தவக் கல்லூரியிலும் நடைபெறவுள்ளன.

கோப்பாய் கல்விக் கோட்டப்பணிப்பாளர் இ. சிவஞானசுந்தரம் இதனைத் தெரிவித்தார்.

(ஐ-180)

# தவக்காலச் சிந்தனை

41 ஆம் நாள்

இன்று ''ஏழைகள் என்றும் உங்களோடு இருக்கிறார்கள் ஆனால் நான் உங்களோடு என்றும் இருக்கப் போவதில்லை'' என்று இயேசு கூறியிருந்தார் ஆனால் கிறிஸ்துவின் வார்த்தைகளோ நம்மை விட்டு என்றும் அழிவதில்லை. அதைப் பாதுகாப்பதும் அறிவிப்பதும் இத்தவக்காலத்தில் ஒவ்வொரு கிறிஸ்தவனின் முக்கிய கடமையாகும்.

பார்வை இழந்தோரின் கண்களைத் திறக்கவும் கைதிகளின் சிறைகளை அறுக்கவும் இருளில் இருப்போரை பிறையினின்று மீட்கவும் அழைக்கப்பட்ட இறை ஊழியர்கள் பலர். கிறிஸ்துவுக்கு முன்னும் கிறிஸ்துவுக்குப் பின்னும் இவ்வாறு அழைக்கப்பட்டோர் ஏராளம். ஆனால் நாம் இன்னும் என்ன செய்து கொண்டிருக்கிறோம்? ஞானஸ்நானத்தின் வழியாக இத்தகைய கடமைகளைக் கொண்ட நாம் இத்தவக்காலத்திலாவது இறைவனின் ஊழியர்களாக இருக்கின்றோமா என்பதை இன்று சிந்திப்போமாக! மரியாளின் நறுமணத்தைலம் வீடெங்கும் பரவியது போல் கிறிஸ்துவின் வார்த்தைகளும் தாம் செய்யும் முன் மாதிரிகையாக நல்ல செயல்களும் நேர்மையான வாழ்க்கையும் உலகெங்கும் பரவ இப்புனித நாளை கிறிஸ்துவுக்காக — ஏழைகளுக்காக — நல்ல முறையில் செலவிட சிந்தித்துச் செயலாற்றுவோம்.

றெ. துவாரகா

[உரும்பிராய்]

# சின்னஞ்சிறு விளம்பரம்

## தவறிவிட்டது

வசந்திஜா என்னும் பெயருடைய மக்கள் வங்கி கொழும்பு காசோலை இல. 265332 ரூபா 1,43,000 தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து வசந்திஜா, இல-100. K.K.S வீதி, சுன்னாகம் (பழைய பொலீஸ் நிலையம் முன்பாக) என்னும்முகவரியில்கொடுத்து தகுந்த சன்மானம் பெற்றுக் கொள்ளவும்.

(75417)

இந்துக்கல்லூரி வீதி, பண்டத்தரிப்பைச் சேர்ந்த சின்னத்தம்பி அல்பேட் நோயல் மணிமாறன் என்பவருடைய தேசிய அ. அ. (இலக்கம்-643510189V), விசேடஅ.அ. தொழில்அ.அ. (யாழ்ப்பாணக் கல்லூரி, ஆசிரியர்) என்பன 14-04-2000 அன்று யாழ்ப்பாணத்திற்கும் வட்டுக்கோட்டைக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து மேற்கூறிய முகவரியில் ஒப்படைத்துதவவும்.

(75470)

தம்பிஐயா - ஜெயவதனியின் விசேட அ. அட்டை (0906029815), துரைசிங்கம் சிவாயினியின் தேசிய அ. அட்டை (755473685V), விசேட அ. அட்டை (0906016770) என்பன சுன்னாகத்தில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் கந்தையா - துரைசிங்கம், மடத்தடி, கந்தரோடை, சுன்னாகம் என்னும் முகவரியில் ஒப்படைத்து உதவவும்.

(75457)

கோண்டாவில் கிழக்கு கோண்டாவிலைச் சேர்ந்த அருணாசலம் திலகவதி என்பவருடைய தேசிய அ. அட்டை(இல.665434257V), விசேட அ. அட்டை (இல.0903021609) என்பன 11 04.2000 அன்று யாழ், பஸ் நிலையத்தில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து A. ராஜா, (தேநீரகம்),702,கே.கே.எஸ் வீதி, சிவலிங்கப் புளியடி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் ஒப்படைத்து உதவவும்.

(75445)

இல 4, மூத்த விநாயகர் வீதி, நல்லூரைச் சேர்ந்த கெங்காதரன ரத்தினம் அவர்களின் தேசிய அ. அ. (இல: 26 7070 4 3 10V) 11 04.2000 கொழும்பிலிருந்து வந்த கப்பலில் இறங்கிய போது யாழ்ப்பாணத்தில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து மேற்கூறிய முகவரியில் ஒப்படைத்து உதவவும்.

(75450)

புலோப்பளை மேற்கு பளை என்னும் முகவரியைச் சேர்ந்த திருமதி சண்முகம் பரிமேலம் என்பவரது தேசிய அ. அட்டை (இல 467911899V), 11 04.2000 அன்று வேம்படிக்கும் ஓட்டுமடச்சந்திக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து ஒளியகம் தொலைத் தொடர்பு நிலையம் மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் ஒப்படைத்துதவவும்.

(75392)

## O/L MATHS

விசேடமாக Credits Distintion பெறுபேறடைய அடிப்படை அறிவில்லாதவர்க்கும் கற்பிக்கப்படும். (ஆண்டு 6 — 10 உட்பட) ஆசிரியர், 85, சிவன் கோயிலடி, சிவன் கோயில் பின்புறம், திருநெல்வேலி.

(75317)

## விற்பனைக்கு

8 அடி Dish Antena, L.T 999, Euro Star Receiver, JR × 8, CD (2000 W) Setம் உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 41, இராசாவின் தோட்ட வீதி, யாழ்ப்பாணம். T.P. 2226.

(75431)

## சிறுகதை

சஞ்சீவியில் சிறுகதை பற்றிய கட்டுரை வாசித்தீர்களா? அதில் கூறப்பட்டுள்ள லட்சணங்களுக்கமைய எழுதப்பட்ட பத்துச் சிறுகதைகளும் ஒரு கட்டுரையும் கொண்ட நூல் அராலியூர் ந. சுந்தரம்பிள்ளை எழுதிய யாழ்ப்பாணம் ரூபா 50.

(75467)

## வீடு தேவை

பலாலி றோட்டில் அல்லது அரசடி — கந்தர்மடம் வீதியில் வீடு விலைக்கு உடன் தேவை. முழு விவரங்களுடன் தொடர்பு கொள்ளவும். இல. 39, K.K.S. வீதி, பூனாறி மரத்தடி, கொக்குவில் T. P. 2537

(75405)


COMPUTER POINT
(TRAINING DIVISION)
REGD. No. J/DS/BR/63/97
No. 28, St. Patrick's Road,
Jaffna.

COMPUTER POINT
TRAINING DIVISION

NATIONAL CERTIFICATE IN COMPUTER APPLICATIONS (NCCA)

பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களின் நலன் கருதி புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன.

23-04-2000, 30-04-2000
நேரம்: 10.30 A. M. ( S. L. T. )

- COMPUTER BASIC LEVEL [ For G. C. E. (O/L) Students ]
- COMPUTER INTERMEDIATE LEVEL [ For G. C. E. (A/L) Students ]

கல்வி, உயர்கல்வி அமைச்சும், தேசிய கல்வி நிறுவகமும் இணைந்து நடத்தும் NCCA பரீட்சைக்கான முழுப்பாட அலகுகளும் பூர்த்தி செய்து, மீட்டல் வகுப்புகளும் நடத்தப்படும்.

எமது நிறுவனத்தில் Computer Programming in Basic Language Dip in Computer Application ஆகிய கற்கைநெறிகளைக் கற்று முடித்த மாணவர்கள் இப்பரீட்சைக்கு விண்ணப்பிக்கத் தகுதி உடையவர்கள் என்பதை அறியத் தருகின்றோம். இப்பரீட்சைக்கான சகல பாட அலகுகளையும் நீங்கள் ஏற்கனவே பூர்த்தி செய்துள்ளீர்கள்.

DIRECTOR
Mr. S. R. LOGENDRA
(D.C.A. Systems Analyst)
(M.C.S. India).

(75472)


# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



## அமரர் கந்தையா வேலுப்பிள்ளை

மலர்வு 21-11-1929 உதிர்வு 18-03-2000

எங்கள் அனைவரதும் நல்வாழ்விற்கு வழிகாட்டிய எங்கள் குடும்பக் குலவிளக்கு அன்பு ஐயாவே! உங்களை எங்கு நாம் காண்போம் இனி?

இன்று (17—04—2000) எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்.

'விநாயகர் அகம்',
ஆத்தியடி ஒழுங்கை,
கொடிகாமம்.

[75476]

# திருவாசகம் முற்றோதல்

தொண்டமனாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் ஆதரவில் சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நாளை செவ்வாய்க்கிழமை காலை 7 மணி தொடக்கம் மாலை 4 — 30 மணி வரை ஆச்சிரம சுவாமி செ. மோகனதாஸ் தலைமையில் திருவாசகம் முற்றோதல் நடைபெறும்.

(ஐ-30)

# நேற்று மட்டுப்படுத்திய அளவில் பெற்றோல் விநியோகம்

யாழ். நகரில் உள்ள எரிபொருள் விற்பனவு நிலையங்களில் நேற்று மட்டுப்படுத்தப்பட்ட அளவில் பொதுமக்களுக்குப்பெற்றோல் வழங்கப்பட்டது.

நகரின் பிரதான வீதியில் இருக்கும் எரிபொருள் விற்பனவு நிலையம் ஒன்றில் யாழ். போதனா வைத்தியசாலை டாக்டர்களுக்கு முன்னுரிமை அடிப்படையிலும் மற்றும் பொதுமக்களுக்கும் பெற்றோல் வழங்கப்பட்டது.

மக்கள் தமது வாகனங்களுடன் நீண்ட வரிசையில் நின்று மூன்று லீற்றர் பெற்றோலைப் பெற்றுக்கொண்டனர்.

(ஐ-17)

# மரண அறிவித்தல்கள்

## சிவப்பிரகாசம் திருநாவுக்கரசு

(இளைப்பாறிய கூட்டுறவுதலைமை அலுவலக பரிசோதகர்)

கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் கோண்டாவிலை வசிப்பிடமாகவும் கொண்ட சிவப்பிரகாசம் திருநாவுக்கரசு (இளைப்பாறிய கூட்டுறவுத் தலைமை அலுவலகப் பரிசோதகர்) சனிக்கிழமை (15-04-2000) அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை சிவப்பிரகாசம் - சொர்ணம்மா தம்பதிகளின் புத்திரனும் காலஞ்சென்ற முத்துத்தம்பி - சொர்ணம்மா தம்பதிகளின் மருமகனும் துரைரத்தினத்தின் அன்புக் கணவரும் லங்காதேவி (இளைப்பாறிய ஆசிரியை), சிவகுமாரு (தொலைத்தொடர்பு திணைக்களம், அபுதாபி), சந்திராஜாதேவி (ஆசிரியை யா/ கோண்டாவில் இந்து மகாவித்தியாலயம்), ராஜ்குமார் (பிரான்ஸ்), சுதர்சினி (அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்புத் தந்தையும் சிவராசா (மின் அத்தியட்சகர், ஓமான்), ஞானேஸ்வரி (அபுதாபி), சிவபாலன் (உதவி முகாமையாளர், மக்கள் வங்கி பிரதான வீதி, யாழ்ப்பாணம்.), ஜெயரூபி (பிரான்ஸ்), பரந்தாமன் (அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஹரிகரன் (லண்டன்), கோபிகரன் (அவுஸ்திரேலியா), ஹர்ஷானந் (கொழும்பு), மாதங்கி, வாராகி (அபுதாபி), லக்ஷிதா, ஹம்ஷிதா (மாணவிகள் - வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை), சஞ்ஜே, சஞ்சீவ், ஜனனி (பிரான்ஸ்), ஆரணி (அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்புப் பேரனும்.

செல்வநாயகம் (மலேசியா) காலஞ்சென்ற அருளம்மா மற்றும் நடராசா (கனடா), ஆனந்தமூர்த்தி (கனடா), இரத்தினசிங்கம் (லண்டன்), சிவசுப்பிரமணியம் (கொழும்பு) ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற மயில்வாகனம் (மலேசியா) மற்றும் நாகலிங்கம் (கொக்குவில்), விமலாதேவி (கனடா), யோகராணி (கனடா), விக்கினேஸ்வரி (லண்டன்), சிவஞானேஸ்வரி (கொழும்பு) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் (16—04—2000) நேற்று காரைக்கால் இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
தி. துரைரத்தினம்
(மனைவி)

நவரட்ணராஜா வீதி,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.

(75464)

## இராமலிங்கம் இராசையா

உடுவிலைச் சேர்ந்த இராமலிங்கம் இராசையா 15-04-2000 அன்று இரவு 9 மணியளவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற விசாலாட்சியின் அன்புக் கணவரும், பஞ்சலிங்கம், காலஞ்சென்ற புத்திரலிங்கம் மற்றும் ஜெகதீஸ்வரி ஆகியோரின் அன்புத்தந்தையும், அசோகன் (GTZ), கேசரகௌரி, இந்துமதி (கனடா) ஆகியோரின் மாமனாரும், ரமணன் (கனடா) அகிலா, உத்தமி, குந்தவி, காயத்ரி (வலி.தெற்கு பிரதேச சபை), தாட்சாயினி, மாதினி, கோகுலகிருஷ்ணன், வாகீசன் (கனடா) ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நேற்று (16—04—2000) நடைபெற்றது. இத்தகவலை அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
க. அசோகன்

லவ் லேன்,
உடுவில்.

(75469)

## கிருஷ்ணசாமி பாலச்சந்திரன்

'ரைம்ஸ் ஒவ் சிலோன்' பத்திரிகை நிறுவனத்தில் உதவி முகாமையாளராகப் பணியாற்றியவரும் கொழும்பு கலைச் சங்கத்தின் பொதுச் செயலாளருமான கிருஷ்ணசாமி பாலச்சந்திரன் நேற்று முன்தினம் சனிக்கிழமை (15-04-2000) கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வல்லிபுரம், செல்லம்மா (திருநெல்வேலி கிழக்கு) தம்பதிகளின் அன்பு மருமகனும், யோகாம்பிகையின் (இலங்கை குடும்பத்திட்டச் சங்கம்) அன்புக் கணவரும், ஜெகன், மோகன் (கனடா), மோகனசுதன் (கொழும்பு), ஆகியோரது அன்புத் தந்தையும், கல்யாணியின் (கொழும்பு) அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரது பூதவுடல் கொழும்பு ஜெயரத்தினா மலர்ச்சாலையில் வைக்கப்பட்டு இன்று (2000-04-17) திங்கட்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு கனத்தை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

தகவல்:
வல்லிபுரம் ஸ்ரீதரன்
(மைத்துனர்)

'மோகன பவனம்',
சேர்ச் ஒழுங்கை,
திருநெல்வேலி கிழக்கு.

(75475)

# யுத்தநிறுத்தம் செய்து பேச்சுக்களை உடனடியாக ஆரம்பியுங்கள்

## யாழ். இளைஞர் கழக சம்மேளனம் ஜனாதிபதிக்குக் கடிதம்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 17

பல வருடகாலமாக தொடரும் யுத்தத்துக்கு முடிவு காணும் பொருட்டு உடனடியாக யுத்தம் நிறுத்தம் செய்வதுடன் பேச்சுவார்த்தைக்கு உகந்த பொருத்தமான சூழலை தோற்றுவித்தல் வேண்டும்.

மேற்கண்டவாறு யாழ் மாவட்ட இளைஞர் கழகங்களின் சம்மேளனத்தால் ஜனாதிபதி சந்திரிகாகுமாரதுங்கவுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இளைஞர் விவகார சமுர்த்தி விளையாட்டுத்துறை அமைச்சர் மற்றும் ஸ்ரீலங்கா இளைஞர் கழக சம்மேளனம் ஊடாக அனுப்பி வைக்கப்பட்டுள்ள இந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

சகல தரப்பினரும் ஏற்றுக் கொள்ளக் கூடிய தீர்வுக் திட்டத்தை முன் வைத்தல் மற்றும் செயற்படுத்தல் விடயங்களில் தங்களின் மேலான கவனத்தை செலுத்தி இனங்களுக்கிடையிலான முரண்பாடுகளையும் கசப்புணர்வுகளையும் நீக்க தங்களாலான முயற்சிகளை முன்னெடுத்துச் செல்வீர்களென எதிர்பார்க்கிறோம்—

மோதல்கள் இடம்பெறும் பகுதிகளில் சிக்குண்டுள்ள மக்கள் தமக்கு பாதுகாப்பு எனக் கருதும் இடங்களுக்குச் செல்வதற்கு வாய்ப்பானதொரு சூழலை உருவாக்க தங்களின் மேலானகவனத்தை செலுத்துமாறும் தயவாக கேட்டுக் கொள்கின்றோம்.

இப்படி அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(இ-5)

# காணாமற்போன சைக்கிள்; உதிரிப்பாகம் மூலம் கண்டுபிடிப்பு

யாழ்ப்பாணம், ஏப்ரல் 17

ஒரு வாரத்துக்கு முன் காணாமற்போன சைக்கிள், அதன் உதிரிப்பாகங்களைக் கொண்டு கண்டு பிடிக்கப்பட்டது.

வரணியைச் சேர்ந்த ஒருவரின் பெறுமதி வாய்ந்த சைக்கிளே கரவெட்டிப் பகுதியில் வைத்து கண்டுபிடிக்கப்பட்டது

சைக்கிள் உரிமையாளர் மீன்பிடித் தொழில் செய்பவர்.

சம்பவதினம் சைக்கிளைக் கரையோரமாக நிறுத்திவைத்து விட்டு, உப்பாற்றில் மீன்பிடித்துக் கொண்டு திரும்பி வந்து பார்த்தபோது சைக்கிள் திருட்டு போயிருந்தது.

ஒரு வாரத்தின் பின் கரவெட்டிப் பகுதிக்கு ஏதோ அலுவலாக அவர் வந்த சமயம் அவருடைய சைக்கிளின் உதிரிப்பாகங்கள் சில வேறொரு சைக்கிளில் பூட்டப்பட்டிருப்பதை அவர் கண்டார். அதுபற்றி விசாரித்தபோது இளைஞர்கள் சிலர் சைக்கிள் திருடியதை ஒப்புக்கொண்டனராம், சைக்கிளையும் திருப்பிக் கொடுத்து அவர்கள் மன்னிப்புக் கேட்டனர்.

அவர்களை எச்சரிக்கை செய்து புத்திமதிகள் கூறி சைக்கிள் உரிமையாளர் அனுப்பி வைத்தார். (இ-15)

### பாதுகாப்பு அரணுக்குள் உள்ள

# மயானத்தைப் பயன்படுத்த அனுமதிக்குமாறு கோரிக்கை

பாவனைக்கு இராணுவத்தினரால் தடைவிதிக்கப்பட்டுள்ள கதிரிப்பாய் மயான வீதியைத் திறந்து மீண்டும் மயானத்தைப் பயன்படுத்த உரிய நடவடிக்கை எடுக்குமாறு அப்பகுதி மக்கள் கோரி உள்ளனர்.

இது தொடர்பாக அப்பகுதியைச் சேர்ந்த 800 குடும்பங்கள் கையொப்பமிட்டு மகஜர் ஒன்றினை யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தாவுக்கு அனுப்பியுள்ளனர்.

தம்பாலை, கதிரிப்பாய், வளலாய், இடைக்காடு போன்றஇடங்களைச் சேர்ந்த 800 குடும்பங்களுக்கும் பொதுவாகக் கதிரிப்பாய் மயானமே பாவனையில் இருந்து வந்தது. இந்த மயானம் தற்போது இராணுவப் பாதுகாப்பு எல்லைக்குள் இருப்பதால் தற்போது மக்கள் தனியார் ஒருவரின் காணி ஒன்றையே மயானமாகப் பயன்படுத்தி வருகின்றனர். இந்தக் காணிக்கு அருகே குடிமனைகள் பல இருப்பதால் மக்கள் பெரும் கஷ்டங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது. எனவே கதிரிப்பாய் மயானத்தினை மீண்டும் எமது பாவனைக்குத் திறந்து விடப் பாதுகாப்பு அனுமதியினைப் பெற்றுத் தருமாறு கோருகிறோம்.

இவ்வாறு அந்த மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(ஐ-ரி-180)

### பேராதனைப் பல்கலைக்கழக

# முதற் கலைத் தேர்வு பரீட்சை இங்கு இன்று முதல் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 17

பேராதனைப் பல்கலைக் கழக வெளிவாரிப் பட்டப் படிப்பின் முதற்கலைத் தேர்வுப் பரீட்சைகள் யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெறவுள்ளன.

இன்று 17ஆம் திகதி திங்கட்கிழமை முதல் எதிர்வரும் 27 ஆம் திகதி வரை இப்பரீட்சைகள் நடைபெறும்.

பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் பரீட்சைக்குச் சமுகமளிக்கும்போது வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

பரீட்சை அட்டவணை வருமாறு:

★ 17 ஆம் திகதி திங்கட்கிழமை—பொருளியல்—மு.ப, —பகுதி I, பி.ப.—பகுதி II.

★ 18 ஆம் திகதி செவ்வாய் —அரச அறிவியல்—மு. ப. —பகுதி I, பி.ப.—பகுதி II.

★ 19 ஆம் திகதி புதன் —தமிழ்மொழி—மு.ப.—பகுதி I, பி.ப.—பகுதி II.

★ 20 ஆம் திகதி வியாழன் —மெய்யியல் — மு. ப. —பகுதி I, பி.ப.—பகுதி II.

★ 21 ஆம் திகதி வெள்ளி— இந்துநாகரிகம் — மு. ப. —பகுதி I, பி. ப. பகுதி II.

★ 22 ஆம் திகதி சனி — புவியியல்— மு.ப. — பகுதி I, பி.ப.—பகுதி II.

★ 23 ஆம் திகதி ஞாயிறு— புவியியல்—மு.ப.— பகுதி III, பி.ப.—வரலாறு—பகுதி I.

★ 25 ஆம் திகதி செவ்வாய் —ஆங்கிலம்—மு.ப.—பகுதி I, பி.ப.—பகுதி II.

★ 26 ஆம் திகதி புதன் — சமஸ்கிரதம்—மு.ப.—பகுதி I, பி.ப.— பகுதி II, — வரலாறு பகுதி III.

★ 27 ஆம் திகதி வியாழன் —வரலாறு மு.ப.—பகுதி IV, பி.ப.—பகுதி II.

(ஐ-க-10)

# வீடுகளைப் பார்க்க மக்கள் செல்கின்றனர்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 17

பளைப் பிரதேசத்தில் கடந்த ஒரு சில நாள்களாக அமைதி நிலவுவதையடுத்து மிருசுவிலில் தங்கியிருந்த பளைப்பகுதி மக்களில் சிலர் தமது வீடுகளைச் சென்று பார்வையிட்டு வருகின்றனர்.

கிளாலி கடற்கரைப் பாதை ஊடாகவே இவர்கள் பளைக்குச்சென்று வருவதுடன் அங்கிருந்து தேங்காய் மற்றும் பொருள்களையும் எடுத்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (இ-6-5)

# சமரசமாகத் தீர்த்துவைப்பு

யாழ்ப்பாணம், ஏப்ரல் 17

சுழிபுரம் பகுதியில் உள்ள அயல் கிராமங்களான பெரியபுலோ, வீராவத்தை ஆகியவற்றைச் சேர்ந்த மக்களிடையே கடந்த இரு வார காலமாக நிலவிவந்த பகைமை சுமுகமாகத் தீர்த்து வைக்கப்பட்டுள்ளதாக வலி. மேற்குப் பிரதேசசபையின் தலைவரும் ஈ. பி. டி. பியின் வட்டுக்கோட்டைத் தொகுதி அமைப்பாளருமான ந. திரிலோகநாதன் தெரிவித்தார்.

இந்த இரு கிராமங்களைச் சேர்ந்த சமூக அமைப்புக்கள் விடுத்த வேண்டுகோளை அடுத்து இந்த விடயத்தில் தலையிட்டு இரு தரப்பையும் இணக்க நிலைக்குக் கொண்டு வந்ததாக அவர் மேலும் தெரிவித்தார்.

(ஐ-7)

# 40 ஆவது ஆண்டு நிறைவு விழா

திருநெல்வேலி, ஏப்ரல் 17

அகில இலங்கை சைவப் புலவர் சங்கத்தின் 40 ஆவது ஆண்டு நிறைவு விழாவும், பட்டமளிப்பு விழாவும் எதிர்வரும் 23 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9 மணிக்கு யாழ். வண்ணை நாவலர் மகாவித்தியாலய மண்டபத்தில் சங்க உபதலைவர் சைவப் புலவர் சு. செல்லத்துரை தலைமையில் நடைபெறும்.

பிரதம அதிதியாக யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறைத் தலைவர் பேராசிரியர் ப. கோபாலகிருஷ்ண ஐயர் கலந்து கொள்வார். நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள் ஆசியுரை நிகழ்த்துவார். இவ் விழாவில் பண்டிதர் வ. பேரின்பநாயகம் ''உவமையில்லாக்கலை ஞானம்'' என்ற தலைப்பில் சிறப்புரை நிகழ்த்துவார். திருமுறை ஓதுதல், புராண படனம் என்பனவும் கடந்த 99 ஆம் ஆண்டில் நடைபெற்ற இளம் சைவப் புலவர், சைவப்புலவர் ஆகிய பரீட்சைகளில் சித்தியடைந்தவர்களுக்குப் பட்டமளித்துச் சான்றிதழ் வழங்குதல், புராணபடனப் போட்டியில் வெற்றி பெற்றோருக்குப் பரிசுகள் வழங்கல் ஆகிய நிகழ்வுகளும் இவ் விழாவில் இடம்பெறவுள்ளன.

(ஐ-135)

# இன்ரறக்ட் கழகங்களின் ஒன்றியம் அமைக்கப்பட்டது

யாழ்ப்பாணம், ஏப்ரல் 17

யாழ். மாவட்ட பாடசாலைகளில் இயங்கும் இன்ரறக்ட் கழகங்களை இணைத்து 'யாழ். இன்ரறக்ட் ஒன்றியம்' என்ற அமைப்பை யாழ். நகர் மைய றோட்டறக்ட் கழகம் உருவாக்கியுள்ளது.

யாழ்ப்பாணத்தில் இயங்கி வரும் இன்ரறக்ட்கழகங்களின் சேவையை ஒன்றிணைத்து செயற்திட்டங்களை முன்னெடுப்பதற்கும் சிறந்தமுறையில் செயற்திட்டங்களை செய்து முடிப்பதற்கும் இந்த ஒன்றிய முறை உதவியாக இருக்கும்.

யாழ் இன்ரறக்ட் ஒன்றியத்தினை வழிநடத்துதல் மற்றும் ஒன்றியத்துக்கான தலைமைத்துவம் என்பவற்றை யாழ் நகர் மைய றோட்டறக்ட் கழகமே மேற்கொள்ளும்.

இந்த ஒன்றியத்தில் இதுவரை இணைந்து கொள்ளாத பாடசாலை இன்ரறக்ட் கழகங்கள் உடனடியாகத் தொடர்பு கொள்ளும்படி யாழ். நகர் மைய றோட்டறக்ட் கழகம் கேட்டுள்ளது

(ஐ-4)

# உருவப்படம் திரை நீக்கம்

வதிரியில் உள்ள வடமராட்சி மத்திய கல்லூரியில் சுவாமி விவேகானந்தரின் பெரிய அளவிலான திரு உருவப்படத் திரை நீக்க நிகழ்வு கடந்த மாத இறுதியில் நடைபெற்றது.

இந்த நிகழ்வுக்கு கல்லூரி அதிபர் திருமதி வி. சுகுமாரன் தலைமை வகித்தார்.

பருத்தித்துறை ஸ்ரீ ராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமத்தின் செயலாளர் சுவாமி சித்ரூபானந்தா உருவப் படத்தை மங்கள விளக்கேற்றி திரை நீக்கம் செய்து வைத்தார்.

(ஐ-1)

### நகரசபைக் குண்டுவெடிப்புக்கு முன்னர்

# அலரிமாளிகைக்கு வந்து சென்ற பாபு என்கின்ற நபர் யார்?

கொழும்பு, ஏப்ரல் 17

கடந்த டிசெம்பர் மாதம் 18 ஆம் திகதி கொழும்பு நகரசபை மைதானத்தில் பொ. ஐ. முன்னணி தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் இடம் பெற்ற குண்டுவெடிப்புச் சம்பவத்தின் பின்னர் அலரிமாளிகைக்கு வருவதை நிறுத்திக் கொண்ட ஜாலின் அல்லது ஜாலியா அல்லது பாபு என்று அழைக்கப்படும் நபர் முன்னர் ஜனாதிபதியின் பாதுகாப்புப் பிரிவைச் சேர்ந்த முக்கிய அதிகாரியின் அனுசரணையுடன் ஜனாதிபதி விஜயம் செய்த சகல இடங்களுக்கும் சென்று வந்துள்ளார் என அவர் குறித்து தகவல்கள் தற்போது வெளிவந்துள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.

அலரிமாளிகையுடன் தொடர்ந்து தொடர்புகளை வைத்திருந்த இந்த பாபு கடந்த டிசெம்பர் 18 ஆம் திகதியின் பின்னர் தலைமறைவாகியுள்ளளார் எனவும் —

அவர் குறித்து போதுமான தகவல்கள் கிடைக்கப்பெற்றும் விசாரணைகளை ஆரம்பிக்காமலுள்ளது பாதுகாப்புப் பிரிவு ஊழியர்களுக்கு விசனத்தை அளித்துள்ளது எனவும்—

'யுக்திய' பத்திரிகை செய்தி வெளியிட்டிருக்கிறது.

பாபு அலரிமாளிகைக்கு வந்துபோக ஒத்துழைப்பு வழங்கியது யார் என்ற விடயம் வெளியாகிவிடும் என்ற காரணத்தால் பாபு தொடர்பான விசாரணைகளை மூடி மறைக்க பாதுகாப்புப் பிரிவைச் சேர்ந்த குறிப்பிட்ட அந்த உயர் அதிகாரி முயன்று வருகிறார் எனத் தெரிவிக்கப்படுகிறது.—

இவ்வாறு அந்தச்செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(ஐ)

# நேர்முகப் பரீட்சை

யாழ்ப்பாணம், ஏப்ரல் 17

தமிழ்மொழி மூலப் பாடசாலைகளில் உள்ள ஆசிரிய வெற்றிடங்களை நிரப்புவதற்காக கடந்த நவம்பர் மாதம் கோரப்பட்ட விண்ணப்பங்களின் அடிப்படையில் அழைக்கப்பட்டோருக்கான நேர்முகப் பரீட்சை இன்றும் நாளையும் எதிர்வரும் 19 ஆம் 20 ஆம் திகதிகளிலும் யாழ். வலயக் கல்விப் பணிமனையில் நடைபெறவுள்ளது.

இந்த நேர்முகப் பரீட்சையில் குடாநாட்டில் உள்ள வெளிமாவட்டங்களைச் சேர்ந்த விண்ணப்பதாரிகளும் கலந்து கொள்ள முடியும் என்று யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார் (ஐ-10(

# மினிசினிமா ஆரம்பிப்போர் முன் அனுமதி பெறவேண்டும்

வலி. கிழக்கு, ஏப்ரல் 17

வலி. கிழக்கு பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் மினிசினிமா திரையரங்குகளை நிறுவுவோர் பிரதேச சபையில் முன்னனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்று பிரதேச சபை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

சமூகச் சீர்கேடுகளைக் கட்டுப்படுத்தும் முகமாகப் பிரதேச சபையினரின் முன் அனுமதி பெற்றே மினிசினிமா திரையரங்குகளை நிறுவ முடியும் எனவும்—

இந்த ஒழுங்குமுறைகளைக் கடைப்பிடிககாமல் மினிசினிமா அரங்குகளை நிறுவுவோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும்—

அந்த அதிகாரி தெரிவித்தார். (ஐ-ரி-180)

# இளைஞர் சேவை மன்றத்துக்கு புதிய தலைமையகக் கட்டடம்

யாழ். மாவட்ட தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் தலைமை அலுவலகக் கட்டடத்தை இருபாலை — கோண்டாவில் வீதியில் அமைப்பதற்கான ஆரம்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இக் கட்டடத்தை அமைப்பதற்கு இருபாலை—கோண்டாவில் வீதியில் வலி. கிழக்குப் பிரதேச சபைக்குச் சொந்தமான 20 பரப்புக் காணியைக் குத்தகைக்கு வழங்குவதற்குப் பிரதேச சபை இணக்கம் தெரிவித்துள்ளது.

இதனை அடுத்து அங்கு அலுவலகக் கட்டடத்தை நிறுவ ஆரம்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகச் சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் தெரிவித்தன.

(ஐ-ரி-.80)

# படையினர் பாவனையில் உள்ள கட்டடங்களைப் பெற நடவடிக்கை

## வலி.கிழக்குப் பிரதேச சபை தீர்மானம்

வலி. கிழக்கு, ஏப்ரல் 17

வலி. கிழக்குப் பிரதேச சபை எல்லைக்குள் படையினரின் பாவனையில் இருக்கும் கூட்டுறவுச் சங்கக் கட்டடங்கள், பாடசாலைக் கட்டடங்கள் போன்றவற்றை விடுவிக்க நடவடிக்கை எடுப்பதென வலி. கிழக்கு பிரதேச சபைக் கூட்டத்தில் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சபைக் கூட்டம் கடந்த மாதம் 15 ஆம் திகதி நடைபெற்றது.

இச் சபைக்குட்பட்ட அச்சுவேலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளைக் கடைகளின் கட்டடங்கள், தலைமை அலுவலகக் கட்டடங்கள், பாடசாலைகள் போன்றவற்றைப் படையினர் பயன்படுத்தி வருகின்றனர்.

உரிய தரப்பினருடன் தொடர்பு கொண்டு இக்கட்டடங்களை மீளப்பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுப்பது என சபை ஏகமனதாகத் தீர்மானம் எடுத்தது.

(ஐ-180)

## தற்காலிக விரிவுரையாளர் தெரிவு நேர்முகப் பரீட்சை

காரைநகர், ஏப்ரல் 17

யாழ்ப்பாணம் தேசிய கல்விக் கல்லூரியில் தற்காலிக இணைப்புப்பெறும் விரிவுரையாளர்களுக்கான நேர்முகத் தேர்வு எதிர்வரும் 22 ஆம், 23 ஆம் திகதிகளில் கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் உள்ள யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதி அலுவலகத்தில் காலை 9 00 மணி முதல் நடைபெறும்.

நாற்பது வயதுக்கு உட்பட்ட, தகுதியுடைய விண்ணப்பதாரிகளுக்கு மட்டுமே நேர்முகத் தேர்வுக்கான அழைப்புக் கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. விண்ணப்பதாரிகள் தமது தேசிய அடையாள அட்டையையும் கல்வித் தகமை, தொழிற் தகமைச் சான்றிதழ்களையும், பட்டப்பின் கல்வி டிப்ளோமா விவரப் பெறுபேற்றினையும் அதிபரால் வழங்கப்படும் சேவைச் சான்றிதழையும் எடுத்து வருவதுடன் அவற்றின் போட்டோப் பிரதிகளையும் கொண்டுவருதல் வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் தங்கள் திறமைகளை நிரூபிக்கக்கூடிய ஆக்கங்கள் ஆவணங்கள் ஆகியவற்றையும் எடுத்து வருதல் அவசியமென யாழ். தேசிய கல்விக் கல்லூரி பீடாதிபதி இ. கமலநாதன் அறிவித்துள்ளார்.

(ஐ-73)

## கோப்பாய் வடக்கில் புதிய சந்தை நிறுவப்படும்

வலி. கிழக்கு, ஏப்ரல் 17

வலி. கிழக்குப் பிரதேச சபைப் பிரிவில் இவ்வாண்டு சபை நிதி மூலம் புதிய சந்தை அமைக்கப்படவுள்ளது.

மக்களின் நலன் கருதி கோப்பாய் வடக்கில் இப் புதிய சந்தை 3 லட்சம் ரூபா செலவில் அமைக்கப்படும்.

அச்சுவேலியில் உள்ள மீன் சந்தை புனரமைப்புக்கென ஒருலட்சம் ரூபா ஒதுக்கப்பட்டு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (ஐ-180)

## பன்னிரு திருமுறை பாராயணம்

அகில இலங்கைத் திருமுறை மன்றத்தினால் பௌர்ணமி தினத்தில் நடத்தப்பட்டு வரும் அகத்தியர் தேவாரத் திரட்டு முற்றோதல், பன்னிருதிருமுறைப் பாராயணம் ஆகியன நாளை செவ்வாய்க்கிழமை காலை 7 மணிக்கு யாழ். மாநகர சபை ஆதி நரசிங்க வைரவர் ஆலயத்தில் மன்றத்தின் தலைவர் வ. பேரின்பநாயகம் தலைமையில் நடைபெறும்.

(க-10)

## அச்சுவேலி ஆஸ்பத்திரியில் நாய்களால் கடியுண்டு சிகிச்சை பெறுவோர் அதிகரிப்பு

வலி.கிழக்கு ஏப்ரல், 17

அச்சுவேலி ஆஸ்பத்திரியில் நாய்களால் கடியுண்டு சிகிச்சை பெறவருவோர் எண்ணிக்கை நாளாந்தம் அதிகரித்து வருவதாக மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இந்த வைத்தியசாலையில் நாளாந்தம் 5 பேர்வரையில் நாய்களால் கடியுண்டு சிகிச்சை பெறவருவதாகவும்.

இந்த எண்ணிக்கை இப்போது அதிகரித்துள்ளதாகவும் அவ் வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

கட்டாக்காலி நாய்களை அழிக்கும் நடவடிக்கை நிறுத்தப்பட்டதனால் வீதிகளில் கட்டாக்காலி நாய்களின் நடமாட்டமும் அதிகரித்துக் காணப்படுகிறது. (ஐ-180)

## பழுதடைந்த உருளைக் கிழங்கு விற்பனை

அரியாலை, ஏப்ரல் 17

யாழ். நகரில் உள்ள வர்த்தக நிலையங்கள் மற்றும் சந்தைகளில் நாள்பட்ட — பழுதடைந்த — உருளைக் கிழங்கு விற்பனை செய்யப்பட்டு வருவதாகப் பாவனையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

கடந்த இரண்டு மாத காலத்திற்கு முன்னர்கொழும்பில் இருந்து கப்பல் மூலம் தருவிக்கப்பட்ட உருளைக் கிழங்கே சந்தைகளிலும் வர்த்தக நிலையங்களிலும் கிலோ 140 ரூபாவுக்கு மேல் விற்கப்பட்டு வருகின்றது.

(ஐ-71)

## ஐ.நா. அபிவிருத்தித் திட்ட உதவி

திருநெல்வேலி, ஏப்ரல் 17

ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டப் பிரிவு (யு. என். டி. பி.) யாழ். சுகாதாரத் திணைக்களத்துக்கு டீசலில் இயங்கும் இரு ஜெனரேற்றர்களை வழங்கியுள்ளது.

அளவெட்டி அரசினர் வைத்தியசாலை, மல்லாகத்திலுள்ள தெல்லிப்பழை சுகாதாரவைத்திய அதிகாரி பணிமனை ஆகியவற்றுக்கு இந்த ஜெனரேற்றர்கள் அண்மையில் வழங்கப்பட்டுள்ளன.

இதேவேளை—

ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டப் பிரிவு நான்கு 'ஹீரோ ஹொண்டா' மோட்டார் சைக்கிள்களையும் வழங்கியுள்ளது. மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் பணியாற்றும்பொதுச் சுகாதார பரிசோதகர்களுக்கு இரண்டு மோட்டார் சைக்கிள்களும்—

தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் பணியாற்றும் பொதுச் சுகாதார பரிசோதகர்களுக்கு இரண்டு மோட்டார்சைக்கிள்களும்வழங்கப்படும்எனத்தெரிவிக்கப்பட்டது. (ஐ-135-90)

## இடம்பெயர்ந்த மக்களுக்கு உதவி

வடமராட்சி கிழக்கில் பல்வேறு கிராமங்களிலிருந்து இடம்பெயர்ந்து அம்பன் கிராமத்தில் தங்கியுள்ள 240 குடும்பங்களுக்கு கடந்த புத்தாண்டு தினத்தன்று யாழ். பல்கலைக் கழக மாணவர்கள் நிவாரண உதவிகளை வழங்கினர்.

பால்மா, தேயிலை, பாய்கள், மெழுகுதிரி, பனடோல் ஆகிய பொருள்களே வழங்கப்பட்டன. (ஐ-173)

## உள்ளூராட்சி சபைகளுக்கு கொழும்பில் இருந்து கணனிகள்

உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம் உட்பட மாநகர சபை, நகர சபைகள், பிரதேச சபைகள் ஆகியவற்றுக்கென 20 கணனிகள் வடக்கு — கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளரினால் வழங்கப்பட்டுள்ளன.

சுமார் ஒரு கோடி ரூபா பெறுமதியுடைய இந்தக் கணனிகள் அண்மையில் இங்கு வந்த செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் கப்பல் மூலம் எடுத்துவரப்பட்டன.

இந்தக் கணனிகளில் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்திற்கு இரண்டு கணனிகளும் பளை மற்றும் பூநகரிப் பிரதேச சபைகளுக்கு ஒவ்வொரு கணனியும் வழங்கப்பட உள்ளதாக உள்ளூராட்சி அலுவலக வட்டாரங்கள் தெரிவித்தன.

அத்துடன் 20 'பக்ஸ்' இயந்திரம், 20 மேசைகள் மற்றும் கதிரைகளும் உள்ளூராட்சி ஆணையாளரினால் எடுத்து வரப்பட்டுள்ளன.

இதேவேளை உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்துக்கென ஒரு போட்டோப் பிரதி இயந்திரமும் இரண்டு தட்டச்சு இயந்திரங்களும் கொழும்பில் இருந்து எடுத்துவரப்பட்டுள்ளன.

(இ-6-10)

## சிறுவருக்கு இலைக்கஞ்சி

சண்டிலிப்பாய், ஏப்ரல் 17

வடபிராந்திய சத்திய சாயி இளைஞர் சபை ஆனைக்கோட்டை முள்ளியைச் சேர்ந்த ஐந்து வயதுக்குட்பட்ட போஷாக்கு குறைந்த சிறுவர்களுக்கு வாரத்தில் இரு தினங்கள் இலை சேர் பால் கஞ்சி, சத்துணவை வழங்கி வருகின்றது.

ஆனைக்கோட்டை முள்ளியிலுள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தில் வைத்து வழங்கப்பட்டுவரும் இந்த சத்துணவு தொடர்ந்து ஆறுமாத காலத்துக்கு வழங்கப்படும். 80க்கு மேற்பட்ட போஷாக்கு குறைந்த சிறுவர்கள் இதனால் பயனடைந்து வருகின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-135)

## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 17

யாழ்ப்பாணம் வண்ணை குளங்கரை மருதடி ஸ்ரீ காமாட்சி அம்பாள் (நாச்சிமார்) ஆலயத்தின் வருடாந்த தேர் உற்சவம் இன்று திங்கட்கிழமை காலை 10 மணிக்கு இடம்பெறும்.

இந்த இரதோற்சவ நிகழ்வினை இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் யாழ். சேவைப் பிரிவினர் காலை 8.30 மணி முதல் நேரடி அஞ்சல் செய்யவுள்ளனர்.

இந்த நிகழ்வினை மதுரகவி காரை. எம். பி. அருளானந்தம் தொகுத்து வழங்குவார்.

(க-86-15-30)

★ ★ ★

ஆனைக்கோட்டை கரைப்பிரான் ஆதி விநாயகர் ஆலய வருடாந்த உற்சவம் எதிர்வரும் 19 ஆம் திகதி புதன் கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது

அடுத்த மாதம் 2 ஆம் திகதி தேர்த்திருவிழாவும், மறுநாள் தீர்த்தத்திருவிழாவும் நடைபெறவுள்ளன.

உற்சவ தினங்களில் மாலை 6 மணி முதல் 7 மணி வரை சிவஸ்ரீ பா. சர்வேஸ்வரக் குருக்கள் 'மஹாபாரதம்' என்னும் தலையங்கத்தில் தொடர் சொற்பொழிவு நிகழ்த்துவார். (ஐ-135-15)

★ ★ ★

கொழும்புத்துறை, ஏப்ரல் 17

மாதகல் நுணசை அருள்மிகு ஸ்ரீ முருகமூர்த்தி திருக்கோயிலின் வருடாந்த மஹோற்சவத் தேர்த்திருவிழா இன்று திங்கட்கிழமை நண்பகல் 12 மணிக்கு நடைபெறும். மறுநாள் செவ்வாய்க்கிழமை பகல் 11 மணிக்கு தீர்த்தத்திருவிழாவும் மாலை கொடியிறக்கமும் இடம்பெறும். (ஐ-30)

★ ★ ★

கோண்டாவில் நெட்டிலிப்பாய்ப் பிள்ளையார் கோயில் வருடாந்த உற்சவத் தேர்த்திருவிழா இன்று திங்கட்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறும்.

மறுநாள் பூரணைதினம் காலை 10 மணிக்குத் தீர்த்தமும் மாலை 3.00 மணிக்கு கொடியிறக்கமும் நடைபெறும்.

பூங்காவனத்திருவிழா வியாழக்கிழமை மாலை 5. 00 மணிக்கு இடம்பெறும்.

(ஐ-30)

★ ★ ★

சாவகச்சேரி சங்கத்தானை இத்தியடிப் பிள்ளையார் கோயில் தேர் உற்சவம் இன்று காலை 9.00 மணிக்கு நடைபெறும். மறுநாள் தீர்த்தோற்சவம் இடம்பெறும். (ஐ-117)

★ ★ ★

கொழும்புத்துறை, ஏப்ரல்17

நல்லூர் அருள்மிகு ஸ்ரீ கைலாசபிள்ளையார் கோயிலின் வருடாந்த உற்சவத் தேர்த்திருவிழா இன்று திங்கட்கிழமை காலையும் தீர்த்தத்திருவிழா நாளை காலையும் நடைபெறும். (ஐ-30)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஏப்ரல் 17

அளவெட்டி அளவோலைப் பிள்ளையார் கோயில் தேர்த்திருவிழா இன்றும் தீர்த்தத் திருவிழா நாளையும் நடைபெறவிருக்கின்றன.

தொடர்ந்து 10 நாள்கள் நடைபெறும் இவ்வாலய மகோற்சவம் கடந்த 9 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

(ஐ-15)

★ ★ ★

கல்வியங்காடு அருள்மிகு ஸ்ரீ பத்திரகாளி சமேதஸ்ரீவீரபத்திரசுவாமி தேவஸ்தான வருடாந்த இரதோற்சவம் இன்று திங்கட்கிழமை காலை9மணிக்கும் தீர்த்தோற்சவம் நாளை செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கும் இடம்பெறும்.

(ஐ-180)

★ ★ ★

அரியாலை, ஏப்ரல் 17

நீர்வேலி அருள்மிகு கந்தசுவாமி கோயிலின் வருடாந்த தேர்த் திருவிழா இன்று காலை 9 மணிக்கு நடைபெறும்.

நாளை காலை தீர்த்தத் திருவிழா இடம்பெறும்.

(க-17)

★ ★ ★

மானிப்பாய், ஏப்ரல் 17

மானிப்பாய் வேலக்கைப் பிள்ளையார்ஆலய வருடாந்த உற்சவத்தின் தேர்த்திருவிழா நாளை செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கும் அன்றைய தினம் பிற்பகல் 3 மணிக்கு தீர்த்தோற்சவமும் இடம்பெறும். (க-90)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஏப்ரல் 17

பொலிகண்டி இருப்பை மூலை உப்புக்கிணற்றடி சித்தி விநாயகர் ஆலய மணவாளக் கோலத் திருவிழா இன்று திங்கட்கிழமை காலை 10 மணி முதல் விசேட அபிஷேகத்துடன் நடைபெறும். மாலை விநாயகப் பெருமான் வீதி உலா வருவார். (க)

★ ★ ★

ஏழாலை தெற்கு களபாவோடை ஸ்ரீ வசந்த நாகபூஷணி அம்பாள் ஆலயத்தில் நாளை செவ்வாய்க்கிழமை சித்திரைப் பௌர்ணமி விழா நடைபெறவுள்ளது.

காலை 7 மணிக்கு அபிஷேகமும் 10 மணிக்கு பூசையும் நடைபெற்று தொடர்ந்து அம்பாள் வீதியுலா வருவதுடன் அன்னதானம் வழங்கும் நிகழ்வும் இடம்பெறும். (க)

★ ★ ★

காரைநகர் புளியங்குளம் அருளானந்தப்பிள்ளையார் கோயில் சம்புரோக்ஷண அஷ்டபர்த்தனமஹா கும்பாபிஷேகம் எதிர்வரும் 19 ஆம் திகதி நடைபெறும்.

இதற்கான கிரியைகள் நேற்று முன்தினம் சனிக்கிழமை ஆரம்பமானது.

(க-15)

★ ★ ★

கரணவாய் அருள்மிகு ஸ்ரீ உச்சில் அம்மன் திருக்கோயிலில் நாளை செவ்வாய்க்கிழமை காலை சித்திரா பூரணையும், மாலை திருவிளக்குப் பூசையும் விசேட அபிஷேகம் பூசையுடன் நடைபெறும்.

நாடு நலம்பெற பஜனை— கூட்டுப் பிரார்த்தனையும் இடம்பெறும். (ஐ-30)


## முழு நிலா கருத்தரங்கு

கருப்பொருள்:

சமூக நெருக்கீடுகளில் குடும்பத்தின் பங்கு

கருத்துரை வழங்குபவர்:

எஸ். பரமநாதன்

இணைச் செயலாளர்

(சமாதானத்திற்கும் நல்லெண்ணத்திற்குமான மக்கள் குழு)

நாள்: 18-04-2000 (செவ்வாய்க்கிழமை)

நேரம்: பிற்பகல் 3.30 மணி

இடம்: அகவொளி

குடும்ப வளத்துணை நிலையம்

131, பாங்சால் வீதி, யாழ்ப்பாணம்.

(75468)



உ

# யாழ்.வண்ணை குளங்கரை மருதடி ஸ்ரீ காமாட்சி அம்பாள் ஆலய
# தேர்த் திருவிழா சிறப்பிதழ்



17-04-2000

## நல்லை ஆதீன முதல்வரின் அருளாசி

இன்று வண்ணை ஸ்ரீ காமாட்சி அம்பாள் இரதோற்சவம். இன்னல் துடைத்து, இடுக்கண் களைந்து, தொல்லை வினை போக்கி அருளும் அன்னை சித்திரத் தேரினிலே சிங்காரப் பவனி வந்து அகங்காரத்தை அழித்து நல்லருள் பொழியும் நன்னாள்.

தேரேறி வந்து, போரோயச்செய்து அடியார்கள் அனைவரும் அன்பும் அருளும் பெற்றுச் சமாதானமாகச் சுபீட்சத்துடன் வாழ வழிவகை செய்தல் வேண்டும். இனிய புத்தாண்டு பிறந்துள்ள இவ்வேளையில், "எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதல்லால் வேறொன்றறியேன் பராபரமே" என்றவாறு இனிமேலாவது மக்கள் அனைவரும் சந்தோஷமாக வாழ அம்பிகை அருள் நல்க வேண்டும் என்று நல்லைக் குருமணியின் பாத கமலங் களைப் பணிந்து உளமாரப் பிரார்த்தித்து ஆசி வழங்குகின்றோம்.

**'என்றும் வேண்டும் இன்ப அன்பு'**

*ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய ஸ்வாமிகள்*
2ஆவது குருமஹா சந்நிதானம், திருஞானசம்பந்தர் ஆதீனம், நல்லூர்



## தேர் விழாக் காண வாரீர்!

ஸ்ரீ காமாட்சி அம்பாளின் தேர் விழாக் காண வாரீர்!
திரண்டு வந்து வடம்பிடிக்க ஓடோடி வாரீர்!
கன்னியர்கள் சாமரை வீச குடை கொடி ஆலவட்டம் பிடிக்க
கருணைமிகு காமாட்சியின் விழாக் காண வாரீர்!

*- திரு. க.வி.இராசரெத்தினம்*

## சித்திரையில் தேரேறும் காமாட்சி

வண்ணை நகரில் தேரேறி வருபவளே! வரமருளும் தாய் நீயன்றோ!
வரங்கள் இத்தனையும் தரவேண்டும்; உன்னை எண்ணி வாழவேண்டும்
உலகை வென்றே ஆளவேண்டும்; மண்ணில் உரிமை கிடைக்கவேண்டும்
மக்கள் கூடி மகிழவேண்டும்; நீண்ட போர் நிற்கவேண்டும்!

*மதுரகவி காரை. எம்.பி.அருளானந்தன்*

# கடைக்கண் பார்வை நல்காய்! கருணைமிகு காமாட்சித் தாயே!!

அகிலாண்டகோடி பிரம்மாண்ட நாயகியான அன்னை ஸ்ரீ காமாட்சி அம்பிகை யாழ்ப்பாணம் வண்ணை குளங்கரை மருதடியில் கோயில் கொண்டு எழுந்தருளி வீற்றிருந்து தம்மை வழிபடும் அடியார்களின் வல்வினை போக்கித் தீவினை அகற்றி அருள்புரிந்து வருகின்றாள்.

"பால் நினைந்தூட்டும் தாயினும் சாலப் பரிந்து நீ பாவியேனுடைய ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி" என்ற மணிவாசகப்பெருமானின் தேனினும் இனிய திருவாசகம் உரைப்பது போல உலகையெல்லாம் படைத்துக் காத்து ரட்சிக்கும் அன்புத் தாயாக, ஆதிபராசக்தியாக விளங்குகின்றாள் தாய் காமாட்சி.

மதுரையிலே மீனாட்சியாகவும் காசியிலே விசாலாட்சியாகவும் காஞ்சியிலே காமாட்சியாகவும் எழுந்தருளி அருளாட்சி புரிகின்றவள் யாழ். வண்ணையிலே காங்கேசன்துறை வீதியில் அழகிய இராஜகோபுரத்துடன் அமைந்த அருட் திருக்கோயிலிலும் உறைந்து அன்பர்களுக்கு இன்னருளை அள்ளி அள்ளி வாரி வாரி வழங்கிய வண்ணம் தினமும் ரம்மியமாக அழகுத் திருக்கோலத்துடன் காட்சி தருகின்றாள்.

*சைவப் புலவர் இராசையா ஸ்ரீதரன் – நாச்சிமார் கோயிலடி*

ஸ்ரீவிஸ்வப் பிரம்மகுலப் பொற்தொழிலாளர்கள் தமது வழிபடு தெய்வமாக அண்ட சராசரங்களுக்கும் அகிலாண்ட நாயகியாகத் திகழ்கின்ற ஸ்ரீ காமாட்சி அம்பிகையையே வணங்கி வருகின்றார்கள். வண்ணையம் பதியில் வாழ்கின்ற தொழிலாளர்கள் அன்றாடம் தமது தொழிலை ஆரம்பிக்கும்போது "தாயே! காமாட்சி" என்றபடிதான் ஆரம்பிப்பார்கள்.

ஆதிகாலம் தொட்டே சரித்திரப் பெருமை வாய்ந்த இந்த ஆலயம் நாவல் மரங்களாலும், மருத மரங்களாலும் சோலையென நிறைந்து குளக் கரையின் பக்கத்தே அமைந்து வழிபடும் அன்பரது துயர் போக்கி வருவதாக வரலாறு கூறுகின்றது.

மாதவிடாய்க் காலத்தில் வந்து இந்த இடத்தின் புனிதமறியாது சிறுநீர் கழித்த ஒரு பெண்ணின் முலைகளைத் திருகிவிட்டதாம் ஒரு தேவதை. அதனால் கவலையுற்ற அந்தப் பெண் தேவதையைச் சாந்தப் படுத்தும் நோக்கமாக மரத்தின் கீழே ஒரு கல்லை வைத்து விளக்கேற்றி வழிபட்டதாகக் கர்ண பரம்பரைக் கதையொன்றுமுண்டு.

வாழ்த்த வாயும் நினைக்க மடநெஞ்சும் தாழ்த்தச் சென்னியும் தந்த தலைவியாக ஆதிபராசக்தியாக விளங்கும் ஸ்ரீகாமாட்சியின் பெருமை சொல்லில் அடங்காது. அவளது திவ்யப் பேரருட் கருணையை அனுபவித் தவர்களுக்குத்தான் அது புரியும்.

இன்று சித்திரத் தேரேறி சிங்காரப்பவனி வரும் சிருங்காரக் காட்சி காணக் கண் கோடி வேண்டும். இரு கண்கள் போதாது. அலங்காரமாக ஆரோகணித்து வீதி வலம்வரும் காட்சி கண்கொள்ளாக் காட்சி. விநாயகரும், சுப்பிரமணியரும் கூடவர அலங்காரத் தேர்கள் அசைந்துவரும் அழகே அலாதி. ஸ்ரீ காமாட்சித் தாயின் கருணையோடு அவளது கடைக் கண் பார்வை கிடைக்கப் பெற்றுப் புனித வாழ்வு வாழ்வோமாக!

*"நம்பினார் கெடுவதில்லை நான்குமறைத் தீர்ப்பு*
*அம்பிகையைச் சரண் புகுந்தால் அதிக வரம் பெறலாமே"*


**தேர் விழா சிறப்புற வாழ்த்துவோர்**

மோட்டார் சைக்கிள், சைக்கிள், மோட்டார் உதிரிப்பாகங்களுக்கு
**கிருஷ்ணபிள்ளை & சன்ஸ்**
591, நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம்.

தயாரித்த உடைகளுக்கும் எவர்சில்வர், அழகுசாதனப் பொருள்களுக்கும்
**வெல்கம் சேல் சென்ரர்**
978, நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம்.

நல்ல ரகமான பலசரக்குப் பொருள்களுக்கு உடன் நீங்கள் நாடுங்கள்
**விநாயகர் ரேடர்ஸ்**
1026, நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம்.

ருசிமிக்க குளிர்பான வகைகளுக்கு உடனே விரையுங்கள்
**வைரமுத்து அன் சன்ஸ்**
810, நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம்.

சுத்தமான சிறந்த பலசரக்கு வகைகளுக்கு ஓடோடி விரைந்து வாருங்கள்
**துளசிகா களஞ்சியம்**
1004, நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம்.

உடனடித் தொலைத் தொடர்புகளுக்கு விரைந்து வாருங்கள்
**குகன் தொலைத் தொடர்பகம், குகானந்தபவான்.**
தட்டாதெருச் சந்தி, யாழ். T.P. No: 021 - 3513

வீடியோ CD பிரதிகளுக்கு
இளைய தலைமுறையின் இசைப் பதிவகம்
**வீடியோ எக்கணமி மியூசிக் கோணர்**
612/4, நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம்.
297, பலாலி வீதி, பரமேஸ்வராச் சந்தி.

பாலர் கல்வி வளம்பெற நாடவேண்டிய பாடசாலை
**சிவன் முன்பள்ள கல்விநிலையம்**
109, சிவன் வடக்கு வீதி, யாழ்ப்பாணம்.
*உரிமையாளர்:- செல்வி தி.மீனலோஜினி*

புதுப்புது டிசைன் துணிவகைகளுக்கும் றெடிமேட் ஆடைகளுக்கும்
**அலங்கார் ஆடையகம்**
23, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.

அம்பிகையின் திருவருட்கடாட்சம் எல்லோருக்கும் கிடைப்பதாக!
**துர்க்கா வெல்டிங் வேக்ஸ்**
680, நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம்.

சிறந்த ரக 22 கரட் நகைத் தெரிவுகளுக்கு
**சோபிகா நகையகம்**
111/1/1, 223, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

இளமை மெருகோடு எழிலூட்டும் தங்க நகைகளுக்கு
**அர்ச்சனா ஜுவலர்ஸ்**
118, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

உள்நாடு - வெளிநாடு தொலைத் தொடர்புகளுக்கு
**வேணுகா கொமினிகேஷன் வீடியோ & போட்டோ ஸ்ரற்**
நாச்சிமார் கோயிலடி, யாழ். T.P: 021-2541 2845

முப்பது ஆண்டுகளாக அச்சுலகில் சிறந்த முத்திரை பதித்தவர்கள்
**சாந்தி அச்சகத்தினர்!**
இவர்களது மற்றொரு புதிய சேவை:
**கொம்பியூட்டர் பிறின்ட்!**
நவீன வடிவமைப்பில் எண்ணம் போல் அச்சிட நாடுங்கள்
**சாந்தி அச்சகம்**
நாச்சிமார் கோயிலடி யாழ்.
தொலைபேசி: 2821

நவீன டிசைன்களில் அசல் 22 கரட் தங்க நகைகளைக் குறித்த தவணையில் பெற்றுக் கொள்ளவும்
புதிய, பழைய தமிழ்ப்பட CD பிரதிகளையும் வாடகைக்குப் பெற்றுக் கொள்ளவும் விஜயம் செய்யுங்கள்
**காயத்திரி நகைத் தொழிலகம் வீடியோ விஷன்**
637, நாச்சிமார் கோயிலடி, யாழ்.

அழகிய நவீன மிக்ஸிங் முறையில் சிறந்த வர்ணப் படங்களுக்கு
**"றெக்ஸ்" போட்டோ ஸ்ருடியோ**
606, நாச்சிமார் கோயிலடி யாழ்.
தொலைத் தொடர்புகளுக்கு
**ஜனனி தொலைத் தொடர்பகம்**
உள்நாடு: 021-3384
வெளிநாடு: 0094-21-3384

நவீன வடிவமைப்பில் அசல் 22 கரட் தங்க நகைகளை உடனுக்குடன் ஓடர் செய்து பெற்றுக்கொள்ள
நாணயமும் நம்பிக்கையுமுள்ள சிறந்த ஒரே ஸ்தாபனம்!
உடன் நீங்கள் நாடவேண்டியது
**கணேசா நகையகம்**
194, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

**தேர் விழா சிறப்புற வாழ்த்துவோர்**

நவீன கருவிகள் மூலம் புதிய, பழைய பாடல்கள் பதிவு செய்வதற்கு நாடுங்கள்
**மினி றெக்கோடிங் ஸ்ருடியோ**
958/47, நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம்.

அசல் 22 கரட் தங்க நகைகளுக்கு நாடவேண்டிய இடம்
**நியூ விவேகா நகையகம்**
112 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

உடனடித் தொலைபேசி வசதிகளுக்கு
**ராஜா கொமினிகேஷன்**
607, நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம்.
T.P.No: 021-2847

நவீன ரகமான புது வகையிலான டிசைன் துணி வகைகளுக்கு
**அபிராமி புடைவையகம்**
155,156, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.

ஆலய அலங்காரப் பெயின்ற் வேலைகளுக்கு
**அப்பன் ஆட்ஸ்**
576, காங்கேசன்துறை வீதி, நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம்.

திருமணமா? கவலை வேண்டாம்!!
ஸ்ரீ காமாட்சி அம்பாள் அருளோடு நாடுங்கள்
**மோகனராணி ஏஜென்ட்**
1051, நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம்.

ஓடர் நகைகளைக் குறித்த தவணையில் பெற்றுக் கொள்வதற்கு
**சடாச்சரம் அன் சன்ஸ் நகைத் தொழிலகம்**
949, நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம்.

உறுதியான இரும்பு வேலைகளுக்கு நீங்கள் நாடவேண்டிய இடம்
**எஸ். கனகராஜா இரும்புத் தொழிலகம்**
966, நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம்.

மின் இணைப்புப் பொருள்களுக்கும் பல்ப், ரியூப் பல்ப் முதலியவற்றுக்கும்
**சிவா எலெக்றிக்கல் ஸ்ரோர்ஸ்**
635, நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம்.

தரமான பலசரக்குப் பொருள்களுக்கும் நானாவித பொருள்களுக்கும்
**லிங்கம் ஸ்ரோர்ஸ்**
603, நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம்.

பற்றறி சார்ஜ், கேற் கிறில் வெல்டிங் வேலைகளுக்கு
**ஸ்ரீ அம்பாள் எலக்றிக்கல்ஸ்**
1039, காங்கேசன்துறை வீதி, நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம்.

உள்நாடு - வெளிநாடு தொலைத் தொடர்புகளுக்கு
**கனிமூன் தொலைத் தொடர்பு**
880/2, நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம்.
உள்நாடு: 021-3183
வெளிநாடு: 0094-21-3183

ஸ்ரீ காமாட்சி அம்பாள் திருவருள் அனைவருக்கும் கிடைக்கட்டும்!
**அப்பன் ரேணிங் வேக்ஸ்**
1004, நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம்.

கடும் வெயிலில் நடந்து களைத்துவிட்டீர்களா? தாகம் தீர்த்துக்கொள்ள விரையுங்கள்!
**லிங்கன் கிறீம் ஹவுஸ்**
119, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

அசல் 22 கரட் தங்க நகைகளை அதி நவீன டிசைன்களில் குறித்த தவணையில் ஓடர் செய்து பெற்றுக்கொள்ளவும் சிங்கப்பூர் தெரிவுக்கும்
**ஸ்ரீ ஜுவல்லறி**
111/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T.P FAX 021 - 2828 கொழும்பு இல: 074-516511

# ஜனாதிபதியுடன் பேசுவதற்கு ஆயர் சங்கம் விருப்பம்

## சந்தர்ப்பம் தருமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஏப்ரல்17

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண எடுக்கவேண்டிய முன்முயற்சிகள் தொடர்பாகக் கலந்துரையாடச் சந்தர்ப்பம் வழங்குமாறு ஜனாதிபதியை ஆயர் சங்கம் கோரியுள்ளது.

மூன்றாந் தரப்பு ஒன்றின் மூலம் பேச்சுக்களை ஆரம்பிக்க முன்வருமாறு ஜனாதிபதி, எதிர்க்கட்சித் தலைவர், விடுதலைப் புலிகள் ஆகியோரைக் கோரும் தீர்மானம் ஒன்றை ஆயர் சங்கம் அண்மையில் நிறைவேற்றியிருந்தது.

இந்தத் தீர்மானம் தொடர்பாக ஆயர் சங்கப் பிரதிநிதிகள் எதிர்க்கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்துக் கலந்துரையாடினர்.

தீர்வுக்காக எடுக்கப்படும் சகல முயற்சிகளுக்கும் ஐ.தே.க பூரண ஆதரவை வழங்கும் என ரணில் விக்கிரமசிங்க ஆயர்களிடம் உறுதி கூறினார்.

அதன் பின்னர் ஆயர் சங்கம் ஜனாதிபதிக்குக் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளது.

ஆயர் சங்கம் எடுத்த தீர்மானம் குறித்தும் - வடக்கு - கிழக்கு மக்கள் அனுபவிக்கும் இன்னல்கள் குறித்தும் - ஜனாதிபதியினுடனான சந்திப்பின்போது ஆயர் சங்கக் குழு அவரிடம் எடுத்து விளக்கும்.

அதே சமயம் ஆயர் சங்கத்தின் பிரதிநிதிகள் குழு ஒன்று விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளுடன் பேச்சு நடத்தியதாகக் கூறப்பட்டது. (ஐ-3)

### கப்பல் சேவை...

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)

கப்பல் கட்டணம் தொடர்பாக உள்ள பிரச்சினைகளைப் பொருட்படுத்தாமல் இந்தச் சேவையை ஆரம்பிக்க உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இன்றைய அவசர தேவையைக் கருத்தில்கொண்டு இந்தச் சேவையை ஆரம்பிப்பதற்கு வசதியாக - கப்பலுக்குரிய வழித்துணையை வழங்குவதற்கு ஏற்பாடு செய்யுங்கள் - இப்படி ஆயர் கேட்டுள்ளார். (உ-3)

### தீர்வுக்கு எதிரா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரை முன்னெடுப்பதிலும் -

தமிழ்ப் பிரிவினைவாதத்துக்கும் வெளிநாட்டுத் தலையீட்டுக்கும் எதிரான போராட்டத்தை முன்னெடுப்பதிலும்-

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியும் ஐ.தே.க.வும் உறுதியாகச் செயற்படாமையே இந்தப் புதிய கட்சி தோற்றுவிக்கப்படுவதன் நோக்கம் என்று அவர் மேலும் சொன்னார். (இ-க-3-164)

### புலி உறுப்பினர் உயிரிழப்பு

கடந்த 10ஆம் திகதி கைதடிப் பகுதயில் இடம்பெற்ற மோதலின் போது காயமடைந்த தமது உறுப்பினர் ஒருவர் தனக்குத்தானே கிரனேட்டை வெடிக்க வைத்து உயிரிழந்ததாக விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

ஈகைச்சேந்தன் (குலசிங்கம் - அன்பழகன் - வவுனியா) என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவார் என்று புலிகளின் குரல் வானொலி தெரிவித்தது.

இதேவேளை கடந்த 4ஆம், 14ஆம் திகதிகளில் முல்லைத்தீவு மற்றும் மன்னார் மாவட்டங்களில் இடம் பெற்ற தவறுதலான வெடிவிபத்துக்களில் முறையே தாயகன் (பரமானந்த வடிவேல் சசிக்குமார் - யாழ்ப்பாணம்) எல்லைப்படை வீரரான ஆனந்தன் நந்தினி - யாழ்ப்பாணம்) ஆகியோரும் உயிரிழந்தனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. (இ-7-8)

### நூற்றுக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பஸ்சேவை மறு அறிவித்தல்வரை இடை நிறுத்தப்பட்டுள்ளதாக திருகோணமலைப் பட்டணமும் சூழலும் பிரதேச செயலகம் நேற்றுப் பிற்பகல் அறிவித்துள்ளது. (ஐ-3-9-15-139)

# பெற்றோல் தாராளமாக நேற்று விநியோகம்

யாழ்ப்பாணம்,ஏப்ரல்17

யாழ்நகரில் நேற்று பெற்றோல் நிலையங்களில் பெற்றோல் தாராளமாக விநியோகம் செய்யப்பட்டது.

வாகனங்களுக்கு தேவையான அளவு பெற்றோல் கட்டுபாடு இன்றி வழங்கப்பட்டது.

யாழ்.மாக்கெட் பெற்றோல் நிலையம் பிரதான வீதியில் அமைந்துள்ள பெற்றோல் நிலையம் ஆகியவற்றுக்கு முன்னால் மோட்டார் சைக்கிள்கள், கார் நீண்ட வரிசையில் காணப்பட்டன. (இ-139)

### அன்னைபூபதி நினைவுதின இறுதி நாள் நிகழ்வு

உண்ணாவிரதம் இருந்து உயிர் நீத்த அன்னை பூபதியின் 12ஆவது ஆண்டு நினைவுதினத்தின் நிறைவு நாள் நிகழ்ச்சிகள் நாளை மறுதினம் புதன்கிழமை மட்டக்களப்பு கொக்கட்டிச்சோலைப் பகுதியில் நடைபெறவுள்ளன.

இந்த இறுதி நாள் நிகழ்வுகளில் விடுதலைப் புலிகளின் முக்கிய பிரமுகர்கள் கலந்து கொள்வர் என மட்டக்களப்புச் செய்திகள் தெரிவித்தன. (இ-7-21)

### தாக்குதல்

நல்லூர் பகுதியிலுள்ள தேநீர் கடை ஒன்றுக்குள் நேற்று மாலை புகுந்த இளைஞர் குழு ஒன்று அந்தக்கடை உரிமையாளரைக் கடுமையாகத் தாக்கியதாகத் தெரிவிக்கப்பட்டது.கடையும் சேதத்துக்குள்ளாகியது. (இ-3)


**படிவம்**

**சுகாதார சேவைத் திணைக்களத்தின் பதவிகளுக்கான பயிற்சியாளர்களை ஆட்சேர்த்துக்கொள்ளும் போட்டிப் பரீட்சைக்கான விண்ணப்பப்படிவம் இன்று நண்பகல் முதல் விற்பனைக்கு வருகின்றது.**

**விண்ணப்ப முடிவுதிகதி: 05-05-2000**

படிவ அளவு:
ஏ4 – 4 பக்கம்
*வர்த்தமானி பார்வைக்கு உண்டு.*
பாரதி பதிப்பகம்
*430, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.*
தொலைபேசி: 3081
(C/11864)

**ஐடியல் அக்கடமி**
சண்டிலிப்பாய்
**O/L DAY CLASS 2000**
**ஆரம்பம்: 19-04-2000 புதன் 8.00 மணி**
*எமது வழமையான ஆசிரியர் குழு*
**கணிதம்:**
**திரு.V.N.பத்மநாதன்**
(75487)

**சித்திவிநாயகர் கல்வி நிலையம்**
**O/L பகல்நேர வகுப்புக்கள்**
**ஆரம்பம்: 19-04-2000**
புதன்
காலை 10.00 மணி
*வழமையான தனித்துவம் வாய்ந்த ஆசிரியர் குழு*
(C/11834)

**PERSONAL CLASS**
**இணைந்த கணிதம்**
**2002இற்கான புதிய பிரிவு ஆரம்பம்**
*செவ்வாய் 4.00 p.m.*
**காவிகள் (2001)**
*செவ்வாய் 9.00 a.m.*
திரு. N.A.சயனன B.Sc.
*இடம்:*
மக்கள் வங்கியடி,
வளாக வீதி,
திருநெல்வேலி.
(75455)

**சுனில் ஆட்ஸ்**
**Sunil Arts**
PHOTOCROME
SENKADA
19-04-2000 அன்று படச்சுருள்கள் கொழும்புக்கு அனுப்பப்படும்.
272, Stanley Road,
Jaffna.
(C/11868)


## கண்ணீர் அஞ்சலி

சங்கத்தலைவரும் இளைப்பாறிய தலைமைக் காரியாலய கூட்டுறவுப் பரிசோதகருமாகிய

**சி.திருநாவுக்கரசு**

அவர்களின் மறைவையிட்டு துயருறும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவப்பதுடன் அன்னாரின் ஆத்ம சாந்திக்காகவும் பிரார்த்திக்கின்றோம்.

*நந்தாவில் அம்மன் கோயிலடி, கொக்குவில் கிழக்கு.* — *இந்து சமய அபிவிருத்திச் சங்கம்*

(C/11869)


**JAFFNA TECHNICAL INSTITUTE**
Reg. No.15251
JAFFNA, SRI LANKA

**தொழிற்பயிற்சிகள்**

**RADIO, T.V and VIDIO DECK REPAIRING**
சகல இன, ரேடியோ, ரீ.வி, வீடியோ டெக் மற்றும் எலக்ரோனிக் உபகரணங்கள் என்பன திருத்தும் முறை ஆரம்பத்திலிருந்து பயிற்சியளிக்கப்படும்.
*(காலம் 9 மாதங்கள்)*

**MOTOR REWINDING and ELECTRICAL WIRING**
சகல இன மோட்டார், (F) பான், ரான்ஸ்போமர்கள் றிவைண்டிங் செய்யும் முறை மற்றும் வீட்டு மின் இணைப்பு முறை என்பன பயிற்சியளிக்கப்படும்.
*(காலம் 6 மாதங்கள்)*

**MOTOR CYCLE MECHANISM**
சகல இன மோட்டார் சைக்கிள், நீர் இறைக்கும் இயந்திரம் திருத்தும் முறை ஆரம்பத்திலிருந்து பயிற்சியளிக்கப்படும்.
*(காலம் 5 மாதங்கள்)*

**AIR CONDITIONING and REFRIGERATION**
சகல இன குளிர்சாதனப்பெட்டி மற்றும் எயர் கொன்டிசன் திருத்தும் முறை ஆரம்பத்திலிருந்து பயிற்சியளிக்கப்படும்.
*(காலம் 6 மாதங்கள்)*

**CITY and GUILDS of LONDON EXAM**
(1) POWER (2) ELECTRONICS

*புதிய பயிற்சிகள் ஆரம்பம்*

21-04-2000 (கிழமை நாட்களில்)
23-04-2000 (சனி, ஞாயிறு நாட்களில்)

மேலதிக விவரங்களுக்கு நேரில்

- DIRECTOR,
No.7, PALALY ROAD,
JAFFNA.

52/1, STANLEY ROAD,
JAFFNA.
*(றெயில்வே கடவை அருகில்)*

(75439)

**எலைற் கல்வி நிறுவனம்**
192, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்
**O/L DAY CLASS**

| | |
|---|---|
| கணிதம் : | திரு. T.அற்புதராஜா |
| விஞ்ஞானம் : | திரு. K.பாலமுருகன் |
| தமிழ் : | திரு. B.யாலகணேசன் |
| ஆங்கிலம் : | திரு. M.வரன் |
| சமூகக்கல்வி : | திரு. ஸ்லீபியஸ் |
| சமயம் : | திரு. K.கிருபாகரன் |
| வர்த்தகம் : | திரு. S.D.J.சுதர்சன் |

**ஆரம்பம்: 19-04-2000 புதன் 8.00 a.m.**

- நிர்வாகி

(75448)


## அச்சுவேலி வடக்கு
## அருள்மிகு சரசாலி சித்திர வேலாயுதர் தேவஸ்தானம்

அச்சுவேலி வடக்கு அருள்மிகு சரசாளி சித்திர வேலாயுதர் தேவஸ்தானத்தில் 17,18,19–04–2000ஆம் திகதிகளில் நடைபெறுகின்ற தேர்த் திருவிழா, தீர்த்தத் திருவிழா, பூங்காவனத் திருவிழா ஆகியன சிறப்புற நடைபெற்று அடியார்கள் சகல சௌபாக்கியங்களுடன் சாந்தியும் சமாதானமும் பெற சித்திர வேலாயுதரை வேண்டுகின்றார்கள்.

**விஜிதா அரிசி ஆலை ஸ்தாபனத்தார்**

வல்லை வீதி, அச்சுவேலி
**T.P: 070-212331**


*அத்துடன்*

வாடிக்கையாளர்கள், அன்பர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும் இனிய புத்தாண்டு நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்வதில் பெருமகிழ்ச்சி அடைகின்றார்கள்.

**இல்லத்தரசிகளுக்கு ஒரு நற்செய்தி!**

எமது உற்பத்திப் பொருள்களான மொட்டைக் கறுப்பன் நாட்டரிசி No.1., No.2, பச்சை அரிசி வகைகள், தவிடு வகைகள், அரிசி மா போன்றவற்றை மீண்டும் தரச் சிறப்புடன் பெற்றுக்கொள்வதற்கு விஜிதா அரிசி ஆலையே சிறந்த ஸ்தாபனம் என்பதை பெருமகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்.

*வியாபாரிகளுக்கு விசேட கழிவு உண்டு.*

(75451)



இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 17-04-2000 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.